
Registered as a news paper.
பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்
பக்கங்கள்: பன்னிரண்டு
விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆனி 22 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஜ.அவ்வல் 17 (06.07.2004) செவ்வாய்க்கிழமை இதழ்:277

12 வருடங்களின் பின்னர் மீண்டும்
திருமறைக் கலாமன்றம்
தயாரித்து வழங்கும்
ஞானசௌந்தரி
(இசை நாடகம்)
ஜுலை 9, 10, 11,- 2004 (வெள்ளி, சனி, ஞாயிறு)
மன்ற அரங்கில் மாலை 7.00 மணிக்கு
அன்பளிப்பு 30/=
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
-திருமறைக் கலாமன்றம்

கரும்புலிகள் நினைவாலயத்தில் பொதுச்சுடரினை ஏற்றி அஞ்சலி செலுத்தும் தேசியத் தலைவர்

## மட்டக்களப்பு இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதியில் நேற்றுக்காலை

# புலிகள் மீது இருவேறு தாக்குதல்கள்

# போராளி ஒருவர் பலி, மூவர் காயம்!

## பதற்றநிலை அதிகரிக்கிறது!

(மட்டக்களப்பு)

**மட்டக்களப்பில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற இருவேறு தாக்குதல் சம்பவங்களில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி ஒருவர் கொல்லப்பட்டதுடன், மேலும் மூவர் காயமடைந்தனர். இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து கிழக்கில் நிலைமை மேலும் மோசமடையும் சூழ்நிலை தோன்றியிருக்கிறது.**

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது -

நேற்றுக்காலை 9.30 மணியளவில் மட்டக்களப்பு அரசடி வீதியால் தமது அலுவலகத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்த மட்டக்களப்பு நகர அரசியற்துறை பொறுப்பாளர் சேனாதிராஜா மற்றும் விளையாட்டுத்துறை பொறுப்பாளர் நிலான் ஆகியோர் மீது இனந்தெரியாதோர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

மோட்டார் சைக்கிளில் சென்று

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு சூட்டுச் சம்பவங்கள்; புலிகள் வன்மையாகக் கண்டனம்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் - இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நேற்றுக் காலை இருவேறு இடங்களில் - போராளி ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டதற்கும், மேலும் மூவர் காயமடைந்தமைக்கும் விடுதலைப் புலிகளின் மட்டு-அம்பாறை மாவட்ட அரசியற்துறை வன்மையான கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக நேற்று மாலை வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது -

நேற்றுக்காலை 9 மணியளவில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியான அரசடிச் சந்தியால் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த மட்டக்களப்பு நகர அரசியற்துறை பொறுப்பாளர் சேனாதிராஜா, நிலான் ஆகியோரை இனந்தெரியாதோர் கைத்துப்பாக்கியால் சுட்டனர்.

இவர்கள் இருவரும் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்கு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மேலும் நேற்றுக்காலை 10 மணிக்கு வந்தாறுமூலை கத்தோலிகக தேவாலயத்திற்கு முன் இன்னுமொரு சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் போராளி முறிஞ்சன் வீரச்சாவை தழுவிக் கொண்டார். போராளி றொசான் காயமடைந்தார்.

இவர்கள் இருவரும் மோட்டார் சைக்கிளில் சித்தாண்டியிலிருந்து செங்கலடி நோக்கி வந்துகொண்டிருக்கும் போது பின்பக்கமாக மோட்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் மீது போர் திணிக்கப்பட்டால் எதிர்கொள்ளத் தயாராக உள்ளோம்!

### அம்பாறை மாவட்ட அரசியற் பொறுப்பாளர் குயிலின்பன்

(அம்பாறை)

"எமது மக்கள் மீது, எமது போராளிகள் மீது, இந்தத் தமிழர் படைமீது யுத்தம் திணிக்கப்படுவதாக இருந்தால், அதை எதிர்கொள்வதற்கு நமது தேசியத் தலைவரின் கட்டளையை எதிர்பார்த்து இன்றும் தயாராக உள்ளோம்."

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் த.குயிலின்பன் சூளுரைத்தார்.

அம்பாறை மாவட்ட கரும்புலிகள் தின பிரதான நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேற்படி பிரதான நிகழ்வு அக்கரைப்பற்று - ஆலையடி வேம்பு கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் -

இன்று மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் நாம் பாரிய படைக்கட்டுமானத்தை வைத்திருக்கின்றோம். ஆனால் எமது எதிரிகள் எமது படைகளை சிதைக்க முற்பட்டும், எம்மைத் தாக்கவும் முயன்றுள்ளனர்.

நாம் பலமாக இல்லையென நினைத்து எதிரி இத்தாக்குதல்களை மேற்கொள்கின்ற போதிலும், முடிந்தால் எம்மோடு யுத்தம் செய்ய முன்வரட்டுமெனக் கூறுகின்றோம்.

அப்பொழுது எமது பலம் எத்தகையது என்பதை எதிரிக்கு உணர்த்துவோம்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கரும்புலிகள் நாளை தமிழ்மக்கள் உணர்வுபூர்வமாக அனுஷ்டித்தனர்!

தாயக விடுதலைப் போரில் தம்மை ஆகுதியாக்கிய கரும்புலிகளை நினைவு கூரும் நிகழ்வுகள் நேற்று தமிழர் தாயகப் பகுதியிலும் சர்வதேச ரீதியாகவும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

கரும்புலிகள் தின யாழ்ப்பாணத்திற்கான பிரதான நிகழ்வுகள் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் அமைந்துள்ள கரும்புலி கப்டன் மில்லர் நினைவாலயத்தில் இடம்பெற்றன.

மாலை 6.30 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் அமைந்துள்ள கரும்புலி கப்டன் மில்லர் நினைவாலயத்தில் ஆரம்பமான நிகழ்வில் - தமிழீழ தேசியக் கொடியை புலிகளின் வடமராட்சி கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் தயாவும், பொதுச்சுடரை மாவீரர் பணிமனை துணைப் பொறுப்பாளர் தமிழரசியும் ஏற்றிவைத்தனர்.

கரும்புலி கப்டன் மில்லர் 1987 ஆம் ஆண்டு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் அமைந்திருந்த இராணுவ முகாம் மீது தாக்குதல் நடத்தி வீரச்சாவடைந்த நேரமான 7.05 இற்கு மில்லரின் தாயார் கமலாதேவி வல்லிபுரம் முதன்மைச் சுடரை ஏற்றிவைத்ததுடன் மில்லரின் சிலைக்கு மலர்மாலை அணிவித்தார்.

தொடர்ந்து கரும்புலிகளின் நினைவாலயத்தின் உள்ளே அமைக்கப்பட்டிருந்த கரும்புலிகளின் பொதுச்சின்னத்திற்கான சுடரை கடற்கரும்புலிகளின் வடமராட்சி கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் அன்பழகன் ஏற்றிவைத்தார்.


இந்த நிகழ்வுகளைத் தொடர்ந்து கரும்புலிகள் நினைவுதின பொதுக்கூட்டம் அல்வாய் றோ.க பாடசாலை அதிபர் ரீ.திவ்யநாதன் தலைமையில் ஆரம்பமானது.



திருகோணமலை மாவட்ட கரும்புலிகள் தின பிரதான நிகழ்வுகள் சிவன்கோவில் திறந்தவெளி அரங்கில் இடம்பெற்றது.

(12 ஆம் பக்கம் பார்க்க)






## நெல்லியடியில் நடந்த கரும்புலிகள் தின நிகழ்வின் பதிவுகள்....





பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்



# கிழக்குக்கான கட்டளை அதிகாரி நியமனம்
# பாதுகாப்பு அமைச்சின் செயலாளருடன் ஆராய்வு

## இராணுவத் தளபதி தெரிவிப்பு

கிழக்கு மாகாணத்தின் தற்போதைய நிலையைக் கருத்திற் கொண்டு அந்தப் பகுதிக்கான கூட்டுப்படை நடவடிக்கை கட்டளை அதிகாரியொருவரை நியமிப்பது குறித்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத்துடன் கலந்துரையாடவுள்ளதாக இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சாந்த கொட்டேகொட தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

இந்த நியமனம் குறித்து அரசாங்கம் தீர்மானம் எடுக்கும் . அத்துடன் கிழககுப் பகுதிக்கான மேஜர் ஜெனரல் நந்த மல்லவராச்சி மின்னேரியாவில் இருக்கிறார். கிழக்கு மாகாணத்தின் தற்போதைய நிலைமையை அவரால் கையாளமுடியும்.

படையினருக்கான பயிற்சிகள் மேலும் விருத்தி செய்யப்படவேண்டும். பயிற்சிகள் என்பது முக்கியமானது. படையினருக்கான பயிற்சிகளில் நாங்கள் படிப்படியான முன்னேற்றத்தை அடைந்துவருகின்றோம்.

படைகளில் உள்ள வெற்றிடங்களை இளைஞர்களைச் சேர்ப்பதன் மூலம் நிரப்பிவருகின்றோம். அண்மையில் நடந்த படைக்கான ஆட்சேர்ப்பில் நாம் திருப்தியடைகின்றோம். அண்மையில் நடந்த ஆட்சேர்ப்பில் மூவாயிரம் இளைஞர்களைத் திரட்டக்கூடியதாக இருந்தது. அத்துடன் எதிர்காலத்தில் நிகழும் எந்தவொரு சம்பவத்தைத் தடுக்கவும் படைகளைத் தயார்படுத்தவும் வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இலங்கைக்குத் தேவையான
# இராணுவ உதவிகளை வழங்க ஈரான் இணக்கம் தெரிவிப்பு

ஈரானின் ஆசிய பசுபிக் நாடுகளுக்கான வெளிவிவகார அமைச்சர் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்துப் பேசினார்.

இந்தச் சந்திப்பின்போது ஈரானிய அரசு, இலங்கை அரசுக்கு உட்கட்டமைப்பு உதவிகளை வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்டது.

இராணுவத்தினருக்கு மின் அணுத்துறை மற்றும் செய்மதி இணைப்புக்கள் ஆகியவற்றுக்கு ஈரானிய அரசின் உதவிகளைப் பெறுவதற்கு இந்தச் சந்திப்பில் இணக்கம் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் இரு நாடுகளுக்கும் இடையில் கலாசார மற்றும் பொருளாதாரத் தொடர்புகளுக்கு உதவுவதற்கு இணங்கியுள்ளதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, ஈரானிய வெளிவிவகார அமைச்சர் - பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோரைச் சந்தித்து பேசவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (01)

# நாட்டின் அபிவிருத்தி குறித்தே வெளிநாட்டவர் முடிவெடுக்கலாம்!

## விமல் வீரவன்ச தெரிவிப்பு

இலங்கையை அபிவிருத்தி செய்வது, அதற்கான நிதி ஒதுக்கீடுகள் குறித்தே வெளிநாட்டவர்கள் முடிவெடுக்க முடியும் - இவ்வாறு ஜே.வி.பி கட்சியின் பிரசார செயலர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் இரத்தினபுரியில் நடைபெற்ற மாகாணசபைத் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றும்போது, மேலும் தெரிவித்ததாவது -

இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் வெளிநாட்டவர்கள் முடிவெடுப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. நாட்டின் அபிவிருத்தியை எவ்வாறு முன்னெடுப்பது, அதற்கான நிதி ஒதுக்கீடுகள் குறித்தே கலந்துரையாடல்களை நடாத்த முடியும்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு ஆட்சிக்கு வந்து மூன்று மாதங்களில் நாட்டில் முன்னேற்றகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அடுத்த மூன்று மாதங்களில் வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும் என்றும் விமல் வீரவன்ச தெரிவித்தார். (01)

# பட்டதாரி பயிலுனர்கள் மீது தாக்குதல் ஜே.வி.பியின் குற்றச்சாட்டுக்கு மறுப்பு

(கொழும்பு)

உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட பயிலுனர் பட்டதாரிகள் மீது தாக்குதல் நடாத்துமாறு ஐக்கிய தேசியக் கட்சியினரே பொலிஸாருக்கு அறிவுறுத்தல் வழங்கியிருந்ததாக ஜே.வி.பியினர் தெரிவித்த குற்றச்சாட்டை பொலிஸார் மறுத்துள்ளனர்.

அரசாங்கத்தின் பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தும் வகையில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்துமாறு ஐக்கிய தேசியக் கட்சியே பொலிஸாருக்கு அறிவுறுத்தல் வழங்கியதாக ஜே.வி.பி. குற்றஞ்சாட்டியிருந்தது.

ஜே.வி.பியின் இந்தக் குற்றச்சாட்டு தனிப்பட்ட கட்சி நலன்களைச் சார்ந்ததாக இருப்பதாகத் தெரிவித்த சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவர் இந்த ஆர்ப்பாட்டம் உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் இடம்பெற்ற காரணத்தால் தாம் அதனை நிறுத்துவதற்கான செயற்பாடுகளில் ஈடுபட்டதாகவும் தெரிவித்தார்.

இலங்கை வங்கியின் தலைமைக் கட்டடத்திற்கு முன்னால் ஒரு வாரத்திற்கு முன்னரே ஆரம்பமான இந்த ஆர்ப்பாட்டத்தில் முதலில் குறைந்தளவு பட்டதாரிகளே பங்குபற்றியிருந்ததாகத் தெரிவித்த கொழும்பு பொலிஸ் அதிகாரியொருவர் பின்னர் இவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருந்ததால் ஆர்ப்பாட்டக்காரர்களை அந்த இடத்திலிருந்து விலகிச் செல்லுமாறு தாம் கடுமையான உத்தரவு பிறப்பித்ததாகத் தெரிவித்தார்.

எனினும் ஒருசிலர் அந்த இடத்திலிருந்து அகன்றுசெல்ல மறுத்ததால் அவர்கள் மீது தாக்குதல் நடத்தவேண்டிய தேவை தமக்கு ஏற்பட்டதாகவும் அவர் மேலும் கூறினார்.

# வடக்கு – கிழக்கில் 15 ஆயிரம் பேருக்கு புனர்வாழ்வளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது

கடந்த இரு தசாப்த காலமாக வடக்கு - கிழக்கில் இடம்பெற்ற யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மேலும் 15 ஆயிரம் பேருக்கு புனர்வாழ்வளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக புனர்வாழ்வமைச்சக வட்டாரங்கள் தெரிவித்தன.

அந்த வட்டாரங்களில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது - கடந்த இரு தசாப்தத்திற்கும் மேலாக நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தால் ஏராளமானோர் உடல் உளப் பாதிப்புக்களுக்குட்பட்டுள்ளார்கள்.

அவ்வாறு பாதிக்கப்பட்டவர்களில் 15 ஆயிரம் பேர்வரையில் இனங்காணப்பட்டு நிவாரணம் வழங்கப்பட்டு வருகின்றது. அவர்களுடன் இணைந்து மேலும் நிவாரணம் பெறுவதற்காகவே இந்த 15 ஆயிரம் பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் பாதிக்கப்பட்டவர்களைத் தெரிவுசெய்யும் பணிகளில் புனர்வாழ்வு அமைச்சு ஈடுபட்டுள்ளது.

நாட்டில் உள்ள சகல பகுதிகளிலும் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள் வாழ்ந்து வருவதால், அவர்களை இனங்காணும் நடவடிக்கைகள் புனர்வாழ்வு அமைச்சால் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித் தன.

# தேசியப்பட்டியல் எம்.பிக்களாக மூவர் நியமனம்

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி வெற்றிடமாகவுள்ள தனது தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு மூவரை நியமித்துள்ளது.

புதிய தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களாக பஸீர் சேகுதாவுத், மாயோன் முஸ்தபா மற்றும் எஸ்.நிஜாமுதீன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ள னர்.


கடந்த மாதம் ஐக்கிய தேசிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்த மூவர் இராஜினாமாச் செய்த நிலையிலேயே புதிதாக மூவரின் பெயர்களைத் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கவுக்கு கட்சியின் செயலாளர் மில்ரோய் பெரேரா அறிவித்தார்.

# தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எம்.பிக்கள் அடுத்தமாதம் இந்தியா செல்லவுள்ளனர்

தடைப்பட்டுள்ள சமாதான முயற்சிகள் குறித்து இந்திய அரசியல் தலைவர்களுக்கு அரசியல் தலைவர்களுக்கு விளக்குவதற்காக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அடுத்த மாதம் இந்தியாவுக்குச் செல்லவுள்ளனர்.

இந்தப் பயணத்திற்கான ஏற்பாடுகளை கூட்டமைப்பு மேற்கொண்டு வருவதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. இந்தியாவுக்குச் செல்லும் இவர்கள் அங்குள்ள அரசியற் தலைவர்களைச் சந்தித்து சமாதானப் பேச்சில் தற்போதைய தாமத நிலை குறித்து அரசியற் தலைவர்களுக்கு விளக்கமளிக்கவுள்ளனர்.

தற்போதைய சமாதானப் பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்வதற்கு இந்தியாவின் ஆதரவைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.



நேற்றைய கரும்புலிகள் நாளையொட்டி சர்வதேச தமிழீழ மாணவர் அலுவலகத்தில் நடைபெற்ற விசேட நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும், கரும்புலிகள் தின நிகழ்வுப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசு வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம்.



நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியவர்கள்




# யூரோ - 2004 கிண்ணத்தை கிரீஸ் அணி கைப்பற்றியது!






(லிஸ்பன்)

உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டிக்கு அடுத்தபடியான சர்வதேச பிரபல்யம் வாய்ந்த ஐரோப்பிய கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தில் போர்த்துக்கல் அணியை 1-0 என்ற அடிப்படையில் தோற்கடித்து கிரீஸ் அணி சம்பியனானது.

நேற்று அதிகாலை நடந்த இந்த



இறுதிப்போட்டியில், போட்டியை நடத்திய போர்த்துக்கல் - கிரீஸ் அணிகள் மோதின. இரு அணிகளுமே முதன்முறையாக இறுதிப்போட்டியில் மோதியதால் ஆட்டம் விறு விறுப்பாக இருந்தது.

போட்டி தொடங்கியதுமே போர்த்துக்கல் வீரர்கள் வழக்கம்போல அதிரடியாக முன்னேறித் தாக்கினார்கள். பிகோ, ரொனால்டோ, ருயி கோஸ்டா போன்ற முன்னணி வீரர்கள் நெருக்கடி கொடுத்தனர்.

கிரீஸ் அணியின் தற்காப்பு ஆட்டம் சிறப்பாக இருந்தது. போர்த்துக்கலுக்கு கோல் அடிக்க கிடைத்த வாய்ப்புக்கள் வீணானது. முதல்



பாதி ஆட்டத்தில் கோல் எதுவும் விழவில்லை.


இரண்டாவது பாதி ஆட்டத்தில் கிரீஸ் வீரர்கள் தாக்குதல் ஆட்டத்தில் ஈடுபட்டனர். 57 ஆவது நிமிடத்தில் கிரீஸ் அணிக்கு கோணர் வாய்ப்புக் கிடைத்தது.

இதைப்பயன்படுத்தி அந்த அணி வீரர் பாசினஸ் அடித்த பந்தை மற்றொரு வீரர் ஏஞ்சலோ சாரிஸ்டீஸ் தலையால் முட்டி மிகவும் அற்புதமாகக் கோல் அடித்தார்.

பிரான்ஸ் அணிக்கு எதிரான காலிறுதிப் போட்டியிலும் அவர் இவ்வாறான கோல் ஒன்றை அடித்தமை குறிப்பிடத்தக்கது.



கோல் விழுந்ததால் போர்த்துக்கல் அணி அதிர்ச்சியடைந்தது. இதனால் அவர்கள் ஆக்ரோஷத்துடன் விளையாடினார்கள். அந்த அணி வீரர்கள் முன்னேறி தொடர்ந்து தாக்குதல் ஆட்டத்தில் ஈடுபட்டனர்.



இதைக் கிரீஸ் பின்கள வீரர்கள் தடுத்துவிட்டனர்.


ஆட்டநேரம் முடியும்வரை போர்த்துக்கல் அணியால் பதில் கோல் போடமுடியவில்லை. இதனால் கிரீஸ் 1-0 என்ற கோல் கணக்கில் வென்று சம்பியன் பட்டம் பெற்றது.

ஐரோப்பியக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் கிரீஸ் அணி முதன்முறையாக சம்பியனாகி வரலாற்று சாதனை படைத்தது.

இந்தப் போட்டி தொடங்குவ



தற்கு முன் கிரீஸ் கோப்பையை கைப்பற்றுமென யாருமே எதிர்பார்க்கவில்லை. இந்த அணி கோல்கள் அடிப்படையில் காலிறுதிக்கு முன்னேறியது. காலிறுதியில் வலுவான பிரான்ஸையும், அரையிறுதியில் முன்னணி நாடான செக் குடியரசை



யும் தோற்கடித்தது.

கிரீஸ் அணியின் இந்த வெற்றியை அரங்கத்தில் அமர்ந்திருந்த ரசிகர்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடினார்கள். இதேபோல் கிரீஸ் நாட்டிலும் மக்கள் இந்த வெற்றியைப் பட்டாசு கொழுத்தி கொண்டாடினார்கள்.

ஒருவருக்கு ஒருவர் கட்டித் தழுவி வெற்றியைப் பகிர்ந்துகொண்டனர்.

கிரீஸ் தலைநகர் எதென்ஸ் விழாக்கோலம் பூண்டது. விடிய விடிய வெற்றியை ரசிகர்கள் கொண்டாடினார்கள்.




## கமலநாதன் வெற்றிக் கிண்ணத்தை பற்றீசியன் அணி கைப்பற்றியது!

கொக்குவில் மத்திய சனசமூக நிலையம் நடத்திய ஆறுமுகம் கமலநாதன் ஞாபகார்த்த - ஆறு வீரர்கள் பங்குபற்றிய ஐந்து ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் -

யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து விளையாடிய பற்றீசியன் விளையாட்டுக்கழக அணி வெற்றிபெற்று கிண்ணத்தைச் சுவீகரித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய பற்றீசியன் விளையாட்டுகழகம் 5 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை இழந்து 74 ஒட்டங்களைப்பெற்றது.

இதில் லொயிட் 54 ஓட்டங்களைப் பெற்றார். யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் சார்பில் பந்து வீசிய சசிவர்மன், கிருஷ்ணச்சந்திரா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் 5 ஓவர்களில் ஒரு விக்கெட்டை இழந்து 58 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் துஷ்யந்தன் 30, தினேஷ் 19 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றுக்கொடுத்தனர்.

பற்றீசியன் விளையாட்டுக்கழகம் சார்பில் பந்துவீசிய பார்த்தீபன் ஒரு விக்கெட்டை கைப்பற்றினார். இந்த இறுதிப் போட்டியின் ஆட்டநாயகனாக பற்றீசியன் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த செல்வின் லொயிட தெரிவுசெய்யப்பட்டார்.

### ஹொக்கி சுற்றுப்போட்டி

யாழ்பல்கலைக்கழக விளையாட்டு அவை நடத்தும், யாழ்.மாவட்ட கழகங்களுக்கிடையிலான ஹொக்கி சுற்றுப்போட்டியில் இன்று பி.ப 4 மணிக்கு பல்கலைக்கழக அணிக்கும், யங் ஹென்றீசியன் அணிக்கும் இடையிலான ஆட்டமும், பிற்பகல் 5 மணிக்கு விளையாட்டு விஞ்ஞான- கிறாஸ் கொப்பர்ஸ் அணிகளுக்கிடையிலான ஆட்டமும் நடைபெறும்.

## இங்கிலாந்து அணியை மீண்டும் நியூஸிலாந்து தோற்கடித்தது!

இங்கிலாந்தில் நடைபெற்றுவரும் நட்வெஸ்ட் கிண்ணத்துக்கான முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் போட்டியின் ஏழாவது லீக் ஆட்டத்தில் நியூஸிலாந்து அணி ஆறு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்று இறுதிப் போட்டியில் விளையாடத் தகுதி பெற்றது.

பிரிஸ்டல் நகரில் நேற்றுமுன் தினம் நடந்த போட்டியில், இங்கிலாந்து - நியூஸிலாந்து அணிகள் மோதின.

முதலில் இங்கிலாந்து அணி துடுப்பெடுத்தாடியது. அந்த அணி வீரர் பிளின்ரொப் சிறப்பாக ஆடி சதமடித்தார். இங்கிலாந்து நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 237 ஓட்டங்களை எடுத்தது.

பிளின்ரொப் 106 ஓட்டங்களையும், ஸ்ரறஸ் 61 ஓட்டங்களையும் எடுத்தனர். நியூஸிலாந்து அணி சார்பில் பட்லர் 3 விக்கெட்டுக்களையும், ஓரம் 2 விக்கெட்டுக்களையும், ஸ்ரைறிஸ் ஒரு விக்கெட்டையும் எடுத்தனர்.

நியூஸிலாந்து 47.2 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 241 ஓட்டங்களை எடுத்து 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. பிளமிங் 99 ஓட்டங்களையும், மார்ஷல் 55 ஓட்டங்களையும் எடுத்தனர்.

நியூஸிலாந்து அணி இந்தத் தொடரில் பெற்ற 3 ஆவது வெற்றி இதுவாகும். இதன் மூலம் அந்த அணி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. இதேவேளை இங்கிலாந்து அணி 3 ஆவது தோல்வியைச் சந்தித்தது.

இதுவரை நடந்த 7 ஆட்டங்களின் முடிவில் நியூஸிலாந்து 22 புள்ளிகளைப் பெற்றுள்ளது. இங்கிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள் தலா 10 புள்ளிகள் பெற்றுள்ளன.




8 ஆவது லீக் ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது. இதில் இங்கிலாந்து - மேற்கிந்தியத்தீவுகள் அணிகள் மோதவுள்ளன.

8 ஆம் திகதி நடைபெறும் கடைசி லீக் ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணியும், நியூஸிலாந்து அணியும் மோதவுள்ளன.

இங்கிலாந்தைவிட மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கே இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற அதிக வாய்ப்பு இருக்கிறது. இறுதிப் போட்டி 10 ஆம் திகதி நடைபெறும்.

## மீண்டும் விம்பிள்டன் பட்டத்தை தக்கவைத்தார் ரொஜர் பெடரர்



விம்பிள்டன் ரெனிஸ் ஆடவர் ஒற்றையர் பிரிவில் சுவிற்ஸர்லாந்தைச் சேர்ந்த ரொஜர் பெடரர் சம்பியன பட்டம் வென்று, பட்டத்தை தக்கவைத்துக் கொண்டார்.

118 ஆவது விம்பிள்டன் ரெனிஸ் போட்டிகள் லண்டனில் நடைபெற்றன. இந்தப் போட்டியில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவில் அமெரிக்காவின் அன்டி ரோடிக்கை வீழ்த்தி ரொஜர் பெடரர் சம்பியன் பட்டம் வென்றார்.


இறுதிப் போட்டியில் மிக அபாரமான முறையில் ஆட்டத்தை ஆரம்பித்தார் அமெரிக்காவின் அன்டி ரோடிக்.

கடந்த ஆண்டு நடைபெற்ற விம்பிள்டனிலும் சம்பியன் பட்டம் வென்றிருந்த பெடரர், இந்த முறை நடைபெற்ற இறுதிப் போட்டியில் முதல் செட்டை இழந்தாலும், அடுத்த 3 செட்களிலும் சிறப்பாக விளையாடி வெற்றிபெற்றார்.

சுமார் இரண்டரை மணி நேரம் நடைபெற்ற இந்தப் போட்டியில் 4-6, 7-5, 7-6(7-3), 6-4 என்ற செட் கணக்கில் பெடரர் போராடி வெற்றி பெற்றார்.

22 வயதான பெடரர் இவ்வருடத்தின் தொடக்க கிராண்ட்ஸ்லாம் போட்டியான அவுஸ்ரேலிய ஓபனிலும் பட்டம் வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

விம்பிள்டன் சம்பியன் பட்டம் வென்றதன் மூலம் தனது 3 ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை பெடரர் கைப்பற்றினார். இந்தப் போட்டியின் போது இரண்டு முறை மழையின் குறுக்கீடு ஏற்பட்டாலும், விறுவிறுப்புக்கு பஞ்சமில்லாமல் போட்டி நடை



பெற்றது.

இந்தப் போட்டியில் 12 ஏஸ் சேர்விஸ்களை பெடரர் வீசினார். 12 ஆவது ஏஸ் சேர்விஸின்போது பட்டத்தை பெடரர் வென்றார். சம்பியன் பட்டத்தை வென்ற மகிழ்ச்சியில் அப்படியே முழங்காலிட்டு ஆனந்தக் கண்ணீர் வடித்தார் பெடரர்.

இந்தப் போட்டிகளில் கடுமையாகப் போராடியதாக ரோடிக்கைப் பாராட்டிய பெடரர் - விம்பிள்டனில் இனிவரும் காலங்களில் இருவரும் பல முறை விளையாடுவோம் என்று நம்புவதாகக் கூறினார்.

### கரும்புலிகள் நினைவு

## உதைபந்தாட்டப் போட்டியில் சென் மேரிஸ் அணி வெற்றி!



றூபின்குமார்



வீன்சிங்

கரும்புலிகள் நினைவாக வல்வெட்டித்துறை விளையாட்டுக்கழகம் நடாத்திய உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் சென். மேரிஸ் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது.

நேற்றுமுன்தினம் இரவு 9 மணிக்கு மின்னொளியில், தீருவில் மைதானத்தில் இப்போட்டி இடம்பெற்றது.

இந்தச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து விளையாடிய நாவாந்துறை சென்.மேரிஸ் சனசமூக விளையாட்டுக்கழக அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிவாகை சூடியது.

மிகவும் விறுவிறுப்பாக நடந்த இந்த ஆட்டத்தில் - இறுதிநேரத்தில் தடுப்புக்களை எல்லாம் உடைத்துக்கொண்டு சென்.மேரிஸ் அணி வீரர் அ.பிரபு முதலாவது கோலை அடித்தார்.

இதனால், நிலை குலைந்த றோயல் அணியை மீண்டும் ஊடுருவிய வின்சிங் அனைத்துத் தடுப்புக்களையும் தகர்த்தெறிந்து கோல் கம்பத்திற்கு மிக அண்மையில் சென்று லாவகமாக இரண்டாவது கோலைப் போட்டார்.

இந்த ஆட்டத்தின் நாயகனாக வின்சிங் தெரிவுசெய்யப்பட்டார். சிறந்த கோல் காப்பாளராக சென்.மேரிஸ் அணியின் வீரர் றூபின்குமார் பரிசளிததுக் கௌரவிக்கப்பட்டார்.

## வாசலில் ஒளிவீசு ஒலிநாடா வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

லண்டன் ஈவிங் கனக துர்க்கை அம்மன் ஆலய இந்து இளைஞர் பேரவையின் வெளியீடான 'வாசல் ஒளி வீசு' எனும் பக்திப்பாடல் இசைத்தட்டு ஒலி நாடா வெளியீட்டு விழா புதன்கிழமை மாலை 4 மணிக்கு நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த வெளியீட்டு விழாவில் வெளியீட்டு உரையை சுற்றுச்சூழலியலாளர் பொ.ஐங்கரநேசனும், மதிப்பீட்டு உரைகளை கவிஞர் சோ.பத்மநாதன், பேராசிரியர் சபா.ஜெயராஜா ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

# கரவெட்டி குடிநீர் விநியோகத் திட்டத்தை புனரமைத்து விரிவாக்குமாறு கோரிக்கை

கரவெட்டி அத்துளு நன்னீர் விநியோகத் திட்டத்தில் நீண்டகாலமாக நிலவிவரும் அடிப்படைப் பிரச்சினைகளை நீக்கி, விநியோகத்தை விரிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன் அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்தார்.

இந்தக் கோரிக்கை குறித்து, அரச அதிபருக்கு அனுப்பி வைத்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

நன்னீர்வளம் மிகக் குறைந்த பிரதேசங்களில் நிலவி வந்த குடிநீர்க் குறைபாட்டை 1963 ஆம் ஆண்டில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சிவசிதம்பரம் அத்துளு எனும் பிரதேசத்தை மையப்படுத்தி, கரவெட்டி நன்னீர் விநியோகத்திட் டம் அமைக்கப்பட்டு, விநியோகமும் நடந்து வந்துள்ளது.

1963 ஆம் ஆண்டில் இந்த நன்னீர் விநியோகத்தை 4500 குடும்பங்கள் பயனபடுத்தின. ஆனால், 40 வருடங்களின் பின் இந்தப் பிரதேசத்தில் 15 ஆயிரம் குடும்பங்களைக் கொண்ட 5 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் பயன்பெறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால், தற்போதுள்ள திட்டம்- ஒன்று முதல் இரண்டு மணித்தியாலம் பகல் குடிநீர் விநியோகத்தை மட்டும் நடைமுறைப்படுத்துவதால், இந்தப் பிரதேச மக்களின் தேவையைப் பூர்த்திசெய்ய முடியாத அவல நிலையில் மக்கள் துன்பப்படுகின்றனர்.

அத்துடன், கிடைக்கின்ற நீர் கடந்த காலத்தைப்போல உவர்த் தன்மை கொண்ட நீராக மாற்றம் அடைந்து வருவதும், ஆயவின்மூலம் உணரப்பட்டுள்ளது.

எனவே, இந்தப் பிரதேச மக்களின் மிகுந்த அடிப்படைத் தேவையாக நனனீர் விநியோக அவசியம் உருவாகியுள்ளதால், இந்த விடயத்தை ஓர் மிகமுக்கியமான அடிப்படைப் பிரச்சினையாகக் கருதி, 2004, 2005 ஆம் ஆண்டுகளில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன், வட- கிழக்கு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இந்தத் திட்டத்தினையும் மிகமுக்கிய திட்டங்களில் ஒன்றாகத் தெரிவுசெய்ய வேண்டும். இதன்மூலம் இந்தப் பிரதேசத்தில் லட்சத்துக்கு மேற்படட மக்களின் திருப்தியான குடிநீர் விநியோகத்துக்கு, சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள், நீர் வழங்குசபைகள், அரசசார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றின் உதவியுடன் சிறந்த திட்டம் ஒன்றினைத் தயாரித்து, நீண்ட கால நோக்கில் பிரதிப் பொதுமுகாமையாளர் - வட-கிழக்கு, பிராந்திய உதவி நிறுவனம் (வ.கி), தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபை, திருகோணமலை ஆகியவற்றின் உதவியுடன் இந்தத் திட்டத்தினை செயற்படுத்தித் தருமாறு அந்தப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தத் திட்டத்தை விரைவான செயற்பாட்டின் மூலம், பிரதேச மக்களின் நீண்டகாலமான அடிப்படைப் பிரச்சினைக்கு தீர்வுகிட்ட வழிசெய்து உதவவேண்டுமென அவர் மேலும் கோரிகககை விடுத்துள்ளார்.

## வைத்தியசாலைக்கு நிதி அன்பளிப்பு

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை மாவட்ட அரசினர் வைத்தியசாலைக்கு, அமெரிக்காவில் வசிக்கும் வல்வெட்டித்துறை வாசிகள் இருவர் - 75 ஆயிரம் ரூபாவை அன்பளிப்பு செய்துள்ளனர்.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர்களான என்.சிவலிங்கம் என்பவர் 50 ஆயிரம் ரூபாவும், என்.பரமகுரு என்பவர் 25 ஆயிரம் ரூபாவும் வழங்கியுள்ளனர். (17)

## தமிழ் இலக்கிய விழா கலந்துரையாடல்

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சினால் வருடாந்தம் நடாத்தப்படும் தமிழ் இலக்கிய விழா - இந்த ஆண்டு யாழ்ப் பாணத்தில் ஒக்ரோபர் மாதமளவில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விழா தொடர்பான தயாரிப்பு வேலைகள், ஒழுங்குகள் ஆகியவற்றை மேற்கொள்வதற்கான ஆலோசனைக் கூட்டம் எதிர்வரும் 16 ஆம் திகதி காலை 10 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

## புராதன ஆராய்ச்சி மையம் கந்தரோடையில் பெயர்ப்பலகை

கந்தரோடையிலுள்ள வரலாற்றுச் சான்றுகள் அடங்கிய பிரதேசத்துக்கு 'கந்தரோடை புராதன ஆராய்ச்சி மையம்' எனப் பெயரிடப்பட்டுள்ளது.

இந்தப் பெயரைக் கொண்ட பெயர்ப்பலகைகள் சுன்னாகம் சந்தி, கந்தரோடை கந்தையா உபாத்தியார் வீதி ஆகிய இடங்களிலே நடப்பட்டுள்ளன.

முன்னர் இந்தப் புராதன மையத்துக்கு 'கதுறுகொட புனித விகாரை' எனப் பெயரிடப்பட்டிருந்தது. பின் இந்தப் பெயரைக் கொண்ட பெயர்ப் பலகை தமிழ் உணர்வு மிக்கோரால் தீயிட்டுக் கொழுத்தப்பட்டு, கந்தரோடையை - கதுறுகொட என மாற்றியமைக்கும், தமிழர்களின் வரலாற்று இடத்துக்கு விகாரை எனப் பெயர் சூட்டப்பட்டமைக்கு எதிர்ப்பு வெளியிடப்பட்டது.

இந்த எதிர்ப்பின் விளைவாகவே தற்போது இந்தப் பகுதியின் பெயர் மாற்றம் செய்யப்பட்டு, மூன்று மொழிகளிலும் எழுதப்பட்ட பெயர்ப்பலகைகள் நாட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (94)

## ஆலய திருவிழாவில் வெடிகொளுத்திய இளைஞர்கள் பொலிஸாரால் விசாரணை

கோயில் திருவிழாவில் இளைஞர்கள் சிலர் வெடி கொழுத்தி ஆரவாரம் புரிந்தமை தொடர்பாக தெல்லிப்பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

அளவெட்டி பெருமாக்கடவைப் பிள்ளையார் கோயில் பூங்காவனம் திருவிழாவின்போது, சுவாமி வெளி வீதியுலா வரும் வேளையில் இளைஞர்கள் சிலர் சீனவெடிகளைக் கொழுத்தி ஆரவாரம் புரிந்தனர். இதனால் பாதிப்படைந்த கோவில் வீதியிலுள்ள ஒருவர் - தெல்லிப்பளை பொலிஸ் நிலையத்தில் உடனடியாகச் சென்று முறையிட்டார்.

இதனையடுத்து, கோயிலுக்கு உடனடியாக விரைந்து வந்த பத்துக்கும் மேற்பட்ட பொலிஸார் இளைஞர்கள் சிலரை விசாரணைக்குட்படுத்தியதுடன், எச்சரிக்கையும் செய்தனர். (94)

## செஞ்சிலுவைச் சங்கத்துடன் தொடர்புகொள்ளக் கோரிக்கை

கீழே பெயர் குறிப்பிடப்படுவோரை அருகிலுள்ள செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் காரியாலயத்துடன் சனி, ஞாயிறு, பொது விடுமுறை நாட்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

சொ.பேரம்பலம் (வட்டக்கச்சி), சு.இராஜேஸ்வரி (95- 9 ஆம் பிரிவு, கண்ணகிபுரம்), ஜோ.முனீஸ்வரி (கச்சேரியடி, கிளிநொச்சி), க.தனபாக்கியம் (உதயநகர்), த.அஜந்தன் (புளியம்பொக்கணைச் சந்தி), சி.கமலா (கண்ணகிபுரம்), வீமகேஸ்வரி (8ஆம் கட்டை, ஆரோககியபுரம்), ம.விஜயராணி (8 ஆம் கட்டை, ஆரோக்கியபுரம்), ந.சாந்தி (திருக்குடும்பமடம், அக்கராயன்), வ.பரமேஸ்வரி (கோணாவில்), செ.மனோகரன் (சிவநகர்), ஆ.சுரேஸ் ( 14 ஆம் வாய்க்கால், 40 வீட்டுத்திட்டம், ஐயன்குளம்), க. ஜெயலட்சுமி (மயானத்தடி, கிளிநொச்சி), க.லலிதா தேவி (மே/பா தர்மலிங்கம் 483 திருநகர்), த.புஸ்பலதா (பள்ளமடு), த.சாந்தராணி (ஆரோக்கியபுரம் அக்கராயன்), க.சிங்கனி (இரணைமடுக்குளத்தடி), ம.பகீரதி (மணியங்குளம், கிளிநொச்சி), க.சிவமோகன் (8 ஆம் கட்டை, அக்கராயன்), வசந்தகுமாரி (கோணாவில், கிளிநொச்சி) ம.நாதன் (136 ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சி), சி.சந்திரன் (8 ஆம் கட்டை அக்கராயன்), த.சரோஜா (மே/பா சரஸ் தம்பி குடியிருப்பு, ஆரோக்கியபுரம்) செ.லட்சுமி (கோணாவில் கிளிநொச்சி), சுகுமார் (வட்டக்கச்சி) செல்வராஜா (புதுக்காடுமுகம் வட்டக்கச்சி), மு.மரியம்மா (சுபாஸ் குடியிருப்பு ஸ்கந்தபுரம் , ஜோ.வசந்தி அன்டனியம்மா (மணியங்குளம், ஸ்கந்தபுரம்), க.மனோகரன் (அம்லன் போட்டோ கல்விளான்), ர.திருமணி ஏ.2 யு.என். எச்.சி.ஆர். தடசணா மருதமடு).

## எரிபொருள் நிலைய திறப்புவிழா

காங்கேசன்துறை வீதி, உடுவிலில் அமைக்கப்பட்ட சுன்னாகம் ப.நோ. கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையம், நாளை மறுதினம் பிற்பகல் 3 மணியளவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

# தேசிய இளையோர் விளையாட்டு விழா 2 ஆம் நாளில் வெற்றி பெற்றோர் விபரம்

### 14 வயது பிரிவு ஆண்கள்

**தட்டெறிதல்**

1 ஆம் இடம் வி.விதுர்சன் (கிளிநொச்சி), 2 ஆம் இடம் த.நிஷாந்தன் (கிளிநொச்சி), 3 ஆம் இடம் அ.ஸ்ரீபன் சஞ்சிவ் (கிளிநொச்சி).

**பெண்கள்**

**ஈட்டிஎறிதல்**

1 ஆம் இடம் சு.கோகிலவதனி (அம்பாறை), 2 ஆம் இடம் ஜெ.அபிகேசி (திருகோணமலை), 3 ஆம் இடம் ச.அனுதனா (வவுனியா).

**80 மீற்றர் தடைதாண்டல் ஓட்டம்**

1 ஆம் இடம் ஸ்.மேரிறஜீதா (யாழ்ப்பாணம்), 2 ஆம் இடம் இ.பத்மசாந்தி (கிளிநொச்சி), 3 ஆம் இடம் ம.புவித்திரா (வவுனியா).

**100 மீற்றர் ஓட்டம்**

1 ஆம் இடம் கு.உஷந்தினி (மன்னார்), 2 ஆம் இடம் ஆ.மேனகா (அம்பாறை), 3 ஆம் இடம் ம.புவித்ரா (வவுனியா).

### 16 வயதுப்பிரிவு ஆண்கள்

**உயரம்பாய்தல்**

1 ஆம் இடம் என்.கீதன் (மட்டக்களப்பு), 2 ஆம் இடம் ம.மயூரன் (யாழ்ப்பாணம்), 3 ஆம் இடம் இ.சத்தியட்ணம் (கிளிநொச்சி).

**ஈட்டியெறிதல்**

1 ஆம் இடம் மு.முகமதுநிஸ்வி (திருகோணமலை), 2 ஆம் இடம் சி.டிசேகாந் (மட்டக்களப்பு), 3 ஆம் இடம் ம.திலிபன் (மன்னார்).

**நீளம் பாய்தல்**

1 ஆம் இடம் ஆர்.றமணா (மட்டக்களப்பு), 2 ஆம் இடம் சு.கயானன் (மன்னார்), 3 ஆம் இடம் ம.நேதாஜி (வவுனியா).

**குண்டெறிதல்**

1 ஆம் இடம் கு.விஜயன் (யாழ்ப்பாணம்), 2 ஆம் இடம் ம.திலீபன் (மன்னார்), 3 ஆம் இடம் மு.முகமதுநிஸ்வி (திருகோணமலை).

**பெண்கள்**

**நீளம் பாய்தல்**

1 ஆம் இடம் சோ.திவ்வியா (யாழ்ப்பாணம்), 2 ஆம் இடம் எஸ்.வேதினி (அம்பாறை),3 ஆம் இடம் எம்.மேரிசுரேக்கா (திருகோணமலை).

**ஈட்டியெறிதல்**

1 ஆம் இடம் சி.தாரணி (கிளிநொச்சி), 2 ஆம் இடம் ம.கௌதமி (யாழ்ப்பாணம்), 3 ஆம் இடம் த.அனுஷா (வவுனியா).

**100 மீற்றர் ஓட்டம்**

1 ஆம் இடம் இ.வாகினி (யாழ்ப்பாணம்), 2 ஆம் இடம் ச.கலைவாணி (வவுனியா), 3 ஆம் இடம் தனுஜா (திருகோணமலை).

**100 மீற்றர் தடைதாண்டல்**

1 ஆம் த.தனுஷா (யாழ்ப்பாணம்), 2 ஆம் இடம் ர.சனுஜா (யாழ்ப்பாணம்), 3 ஆம் இடம் பூ. கிலானிகா (அம்பாறை)

### 18 வயது பிரிவு ஆண்கள்

**நீளம்பாய்தல்**

1 ஆம் இடம் எச்.ஏ.கலிபீ (மட்டக்களப்பு), 2 ஆம் இடம் ஏ.நிக்காஸ் (அம்பாறை), 3 ஆம் இடம் கு.திலிபன் (மன்னார்).

**தட்டெறிதல்**

1 ஆம் இடம் சி.சுரேஷ் (கிளிநொச்சி), 2 ஆம் இடம் த.பரணிதரன் (யாழ்ப்பாணம்), 3 ஆம் இடம் நா.கிஷன்ரங்கா (திருகோணமலை).

**100 மீற்றர் தடைதாண்டல் ஓட்டம்**

1 ஆம் இடம் எஸ்.பிரசாந் (யாழ்ப்பாணம்), 2 ஆம் இடம் இ.ஜக்சன் (யாழ்ப்பாணம்), 3 ஆம் இடம் கே.எம்.நௌஸாத் (மட்டக்களப்பு).

**100 மீற்றர் ஓட்டம்**

1 ஆம் இடம் கு.முகமதுஹறிஸ் (திருகோணமலை), 2 ஆம் இடம் எஸ்.பிரசாத் (யாழ்ப்பாணம்), 3 ஆம் இடம் முகமட்பவாஸ் (திருகோணமலை).

**பெண்கள்**

**நீளம்பாய்தல்**

1 ஆம் இடம் இ.துவாரகா (கிளிநொச்சி), 2 ஆம் இடம் சி.சசிகலா (மன்னார்), 3 ஆம் ச.மலர்விழி (மன்னார்).

**உயரம்பாய்தல்**

1 ஆம் இடம் க.கலிஸ்ரறொசனி (திருமலை), 2 ஆம் இடம் தி.சிந்துஜா (யாழ்ப்பாணம்), 3 ஆம் இடம் கயந்தினி (வவுனியா), இ.அகல்யா (யாழ்ப்பாணம்).

**100 மீற்றர் தடை தாண்டல் ஓட்டம்**

1 ஆம் இடம் ஜெ.நிஷந்தினி (யாழ்ப்பாணம்), 2 ஆம் இடம் அ.கலியா (யாழ்ப்பாணம்), 3 ஆம் இடம் த.நிஷாந்தினி (திருகோணமலை).

**200 மீற்றர் ஓட்டம்**

1 ஆம் இடம் சி.சிவரஞ்சனி (யாழ்ப்பாணம்), 2 ஆம் இடம் த.கெனற் (மன்னார்), 3 ஆம் இடம் த.சிவதர்சினி (மன்னார்).

### 16 வயதுப் பிரிவு

**பெண்கள் 4X400 மீற்றர்**


1 ஆம் இடம் திருகோணமலை மாவட்டம், 2 ஆம் இடம் அம்பாறை மாவட்டம், 3 ஆம் யாழ்மாவட்டம்

**4X4000 அஞ்சல் ஓட்டம் ஆண்கள்**

1 ஆம் இடம் திருகேணமலை மாவட்டம், 1 ஆம் இடம் மன்னார் மாவட்டம்

**4X100 அஞ்சல் ஓட்டம்**

1 ஆம் இடம் அம்பாறை, 2 ஆம் இடம் மட்டக்களப்பு, 3 ஆம் இடம் முல்லைத்தீவு






ஊடகவியல் தொடர்பான தகவல்களைப் பெறுவதற்கு நமது ஈழநாட்டுக்கு வருகைதந்த சமுதாயமருத்துவபீட மாணவர்களுக்கு பத்திரிகை செய்முறை தொடர்பான விளக்கமளிப்பதை மேலுள்ள படத்திலும், கருத்தமர்வில் பங்குகொண்டோரைக் கீழுள்ள படத்திலும் காணலாம்.




# மீன் இதயத்துக்கு எதிரி



சுவையான உணவாகிய கடல் மீன்கள் இப்போது ஐரோப்பிய மக்கள் மத்தியில் ஒரு கசப்பான உணவாக மாறியிருக்கின்றது. மிகவும் கொழுப்புக்கூடிய பெரிய மீன்கள் - இதய அமுக்க நோயினைக்கொண்டு வரக்கூடியவாறு காணப்படுகின்றன.

ஒமேகா-3 கொழுப்புச்சத்துடைய மீனினங்கள், மனிதர்களின் உடலுக்குத் தீங்கு பயக்கக்கூடியவை. இவை இரத்தத்தினைத் தடிப்பாக்குவதன்மூலம், இரத்தக் குழாய்களை வெடிக்க வைக்கக் கூடியவை என வைத்தியர்கள் கூறுகின்றார்கள்.

ஒமேகா-3 கொழுப்புச் சத்தானது - மிகநீளமான சங்கிலி போன்ற அமிலக் கொழுப்புக் கட்டமைப்புடையது. இது மிகவும் பாரதூரமான விளைவுகளை இதயத்தில் ஏற்படுத்தக்கூடியது.

10 பேர்களில் 7 பேர்கள் தற்போது மீனினங்களைச் சாப்பிடுவதை நிறுத்தியிருக்கின்றார்கள். ஆகவே, மக்கள் மீனை மறந்து, பழங்கள் மற்றும் காய்கறிகளை உண்ணுவதைப் பழக்கமாகக் கொண்டிருக்கின்றார்கள் ஆகவே இதய அமுக்கத்துக்கு மீனும் எதிரிதான்.

# 24 மணிநேர உணவு விடுதி



வெளிநாடுகளில் மக்கள் எல்லோரும் நேரத்திலும் வேகமாகப் பறந்து கொண்டிருக்கின்றார்கள். இதன் காரணமாக அவர்களுக்கு வீட்டிலிருந்து சமைக்கவே நேரம் கிடைப்பதில்லை.

இதனை நிவர்த்தி செயவதற்காகவே குடும்பத்துடன் எல்லா நேரமும் சாப்பிடக்கூடிய சாப்பாட்டுக் கடைகள் ஐரோப்பிய மற்றும் அமெரிக்க நாடு களில் உருவாகியிருக்கின்றன.

இத்தகைய கடைகள் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் உருவாகியிருப்பதனால், இவற்றுக்குக் கிராக்கி அதிகரிக்கின்றது. இந்தக் கடைகளில் காணப்படுகின்ற எண்ணற்ற உணவு வகைகள் மற்றும் காலை, மதியம் மற்றும் இரவு என்ற பிரிவுகள் மக்களை வீட்டிலே சமைக்க, எதிர்காலத்திலே தூண்டுதலாக இருக்காது என மக்கள் நம்புகின்றார்கள். ஆனால், இந்தவகை உணவுகளில் சத்துக்கள் அவ்வளவாக இருக்காது என்று தாய்மார்கள் குறைகூறுகின்றார்கள். இந்தக் கடைகளிலுள்ள விசேடம் என்னவென்றால், இவை 24 மணிநேரமும் திறந்திருப்பதுதான். ஆனால், இந்தக் கடைகளில் உணவுகள் எப்போதும் விலை கூடியவையாக இருக்கின்றன. என்ன இருந்தாலும் இந்தக் கடைகளில் எப்பொழுதும் வாடிக்கையாளர் கூட்டம் நிரம்பி வழிகின்றது.

# டிஜிற்றல் கூடாரம்




சாதாரணமாகப் பாவிக்கப்படுகின்ற கூடாரங்கள் மழைமற்றும் வெயிலைச் சமாளிப்பதற்காகவே தயாரிக்கப்பட்டுள்ளன.

ஆனால், தற்போது இருக்கின்ற கூடாரங்கள் டிஜிற்றல் முறையில் ஆக்கப்பட்டிருக்கின்றன. அவற்றிலே காணப்படுகின்ற அன்ரனாக்கள் செய்மதித் தொடர்கொள்ளளவியாகவும், அத்துடன் வானொலி மற்றும் தொலைக்காட்சி அலைகளை உணரக் கூடியதாகவும் இருக்கின்றன.

இந்தக் கூடாரங்கள் சோலர் சக்தியினால் இயங்குகின்றன. இந்தக் கூடாரங்களை அதிகமாகத் தயாரித்து வருகின்ற கம்பனி - ஒரேஞ் என்ற மொபைல் தொலைபேசிக் கம்பனியாகும். இப்படியான கூடாரங்களுக்குள் அதிநவீன கருவிகள் காணப்படுகின்றன. அத்துடன், மக்கள் எங்கு செல்கின்றபோதும், இந்தவகையான கூடாரங்களை எடுத்துச்சென்றால், அவர்களுடைய வீட்டிலே காணப்பட்ட அத்தனை மீடியா மற்றும் டிஜிற்றல் வசதிகளும் இத்தகைய கூடாரங்களுக்குள் காணப்படும் என்கிறது ஒரேஞ் கம்பனி. ஆகவே, மக்களுடைய ஓய்வுநேரமும் கூடாரத்துக்குள் டிஜிற்றலாகத்தான் இருக்கும்.

# டிஜிற்றல் வீடு



மக்கள் தங்களுடைய வீடுகளை இலத்திரனியல் சாதனங்களால் அலங்கரித்துக் கொண்டு வருகின்றார்கள். வீடுகளையே தியேட்டர் ஆக்கக்கூடிய 'ஹோம்' தியேட்டர்கள் அதிரவைக்கின்றன. அத்துடன், அறைகளின் சுவர்கள் எல்லாம் திரைகளாக மாறியிருக்கின்றன. ஆங்காங்கே பொருத்தப்பட்டிருக்கின்ற ஸ்பீக்கர்கள், மொனோ மற்றும் ஸ்ரீரியோ ஒலிநயம் கொண்டனவாகக் காணப்படுகின்றன.

அத்துடன், டிவிடி மற்றும் அற்புதமான தட்டையான திரைகளைக் கொண்ட தொலைக்காட்சிப் பெட்டிகள் ஆகியனவும் வீட்டுக்கு வீடு காணப்படுகின்றன. இந்த உபகரணங்கள் எல்லாவற்றையும் ஒரு பொதுவான டிஜிற்றல் வலையமைப்புக்குள் கொண்டுவந்து, கட்டுப்படுத்தும் அமைப்பும் வீட்டுக்குள்ளேயே காணப்படுகின்றது. 2008 ஆம் ஆண்டளவில் ஐரோப்பா முழுவதும் டிஜிற்றல் வீடுகள் ஆகிவிடும் எனக்கூறப்படுகின்றது. இத்தகைய உபகரணத் தயாரிப்பில் முன்னணி நிறவனமாக சொனி திகழ்கின்றது. அத்துடன், பிலிப்ஸ் நிறுவனமும் போட்டி போட்டுக்கொண்டு டிஜிற்றல் வீடுகளை நிர்மாணிப்பதில் முன் நிற்கின்றன.

# பக்ரீரியாவின் எதிரி மெழுகு ஆவி

பக்ரீரியாக்களை விரட்டுவதற்குரிய புதுவகை ஆயுதமாக மெழுகுவர்த்திகள் வந்திருக்கின்றன. மெழுகுவர்த்தியின் புகை பக்ரீரியாவினை எதிர்க்கக்கூடியது என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றார்கள். இதிலே காணப்படுகின்ற யூக்கலிபடஸ் மற்றும் ஒரேஞ் ஆகிய எண்ணெய் வகைகள் பக்ரீரியாக்களின் எதிரியாகத் தொழிற்படுகின்றன. பக்ரீரியாக்கள் கூடுதலாக உணவுப் பொருட்களிலிருந்தே பெருகுகின்றன. இதன்காரணமாக பருக்கள் மற்றும் கட்டிகள் ஏற்பட்டு, இறுதியில் நிமோனியாக் காய்ச்சல் வரவும் வாய்ப்பாகின்றது. நன்றாக இந்தநோய் முற்றியபிறகு பென்சிலின் கொடுத்தே பக்ரீரியாக்கள் அழிக்கப்படுகின்றன.




ஆனால், நாளுக்கு நாள் நாங்கள் பாவிக்கின்ற மெழுகுவர்த்திகள் பக்ரீரியாக்களை மெல்ல மெலல வீட்டிலிருந்து அகற்றுகின்றன.

பக்ரீரியாக்களின் தாக்கம் மிக அதிகமாகத் தோலிலேயே காணப்படுகின்றமையால், தோலில் ஒரு உரிவுத்தன்மை ஏற்படுகின்றது. ஆனால், மெழுகாவி தோலிறபடும்பொழுது, பக்ரீரியாவின் தாக்கம் வெகுவாகக் குறைவதாக விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள்.

# திரை விமர்சனம்

## மச்சி

நண்பர்கள் தங்களுக்குள் சகஜமாகப் பயன்படுத்தப்படும் பெஸ்ட் பிரண்ட்ஷிப்தான் கதையின் கருப்பொருள். மும்பையில் செலவாளியாகத் திரியும் துஷ்யந்த் - கோவைக்குப் படிப்பதற்காக வருகின்றார். ஒரு நாள் துஷ்யந்தின் உயிரை அவருடைய சக மாணவர்கள் காப்பாற்றுகின்றார்கள். அன்றிலிருந்து தன்னைக் காப்பாற்றிய மூன்று நண்பர்களுடன் நால்வராகின்றார்.



இடையில் பசுபதியுடன் மோதல் ஏற்பட, அவனிடமிருந்து நண்பர்களைக் காக்கின்றார்.

துஷ்யந்தின் முதற்படத்திலும் பார்க்க தேறியிருக்கின்றார். நடனக் காட்சிகள் மற்றும் சண்டைக்காட்சிகளை அற்புதமாகச் செய்திருக்கின்றார்.

கதாநாயகியாக சுபாபுன்ஜா. சொநதக் குரலில் பேசித தமிழைக் கொன்றிருக்கின்றார்.

பசுபதியின் வில்லத்தனம் சற்றுகூட. இயக்குநர் பசுபதி மற்றும் துஷ்யந் இருவரையும் ஓரளவு பயன்படுத்தியிருக்கின்றார்.

நீண்ட காலத்துக்குப் பிறகு பழைய நடிகர்கள் சுலக்ஷனாவும், பானுச்சந்தரும் வருகின்றார்கள். ஆனால், அவர்கள் பெரிதாக நடிக்கவில்லை என்றே சொல்ல வேண்டும். புதிய இசையமைப்பாளர் ஏஹைனா, ஏ.ஆர் ரஹ்மான் இசையை அப்படியே கொப்பி அடித்திருக்கின்றார். ஒளிப்பதிவு நன்றாக இருக்கின்றது. இயக்குநர் ஓரளவு தட்டுத்தடுமாறி வெற்றிக்காக உழைத்திருக்கின்றார். 'மச்சி' ஓரளவு மலர்ச்சி. -PNS-

# கறுப்பினக் காண்டாமிருகம்




ஆபிரிக்காவில் காணப்படுகின்ற கறுப்பினக் காண்டாமிருகங்கள் வெகுவாகக் குறைந்து, அவற்றினைத் தேடிப் பிடிக்க வேண்டியளவுக்குப் போய்விட்டிருந்தன. ஆனால், தற்போது எடுக்கப்பட்ட கணிப்பீடுகளின்படி இவை ஏறக்குறைய 3600 வரை இருப்பதாகவும்; கடந்த 2 வருடங்களில் 500 வரை அதிகரித்திருப்பதாகவும் கருதப்படுகின்றது.

ஆபிரிக்கக் கறுப்பினக் கண்டாமிருகங்களின் அழிவு, 1970 ஆம் ஆண்டு தொடங்கியது. போர் மற்றும் வேட்டை ஆகிய காரணங்களினால்* இவற்றுக்கு அழிவு ஏற்பட்டது. 1970 ஆம் ஆண்டின் முன்பு எடுக்கப்பட்ட தகவல்களின்படி 65,000 கறுப்பினக் காண்டாமிருகங்கள் இருந்தன என்று கூறப்படுகின்றது.


வறுமை காரணமாக மக்கள் காண்டாமிருகங்களின் கொம்புகளை விற்கத் தொடங்கினார்கள். மத்திய கிழக்கு நாடுகளில் இந்தக் கொம்புகளுக்கு நல்ல மதிப்பு இருக்கின்றது. இவை அங்கே ஆயுதங்களாகச் செய்யப்பட்டு விற்கப்படுகின்றன. வெள்ளையினக் காண்டாமிருகங்கள் அதிகமாக இருந்தாலும், கறுப்புக்கே நல்ல மதிப்பு இருக்கின்றது. கறுப்பினக் காண்டாமிருகங்கள் - கமரூன் நாட்டில் அதிகம் இருப்பதாகக் கருதப்படுகின்றது. 90 வீதமான கறுப்புக் காண்டாமிருகங்களைப் பெருக்க இன்னும் 30 வருடங்கள் தேவை.

# நுண்ணிய எரிபொருள் கலம்



ரொசீபா கம்பனி ஒரு வகையான டிஜிட்டல் எம்.பீ.3 பிளேயர் ஒன்றினை 2005 ஆம் ஆண்டு சந்தையில்விட இருக்கின்றது. இது ஒருவகையான மெதனோல் எரிபொருள் கலத்தினைக் கொண்டதாக ஆக்கப்படும் என நம்பப்படுகிறது. தற்போது இருக்கின்ற ஐதரசனுக்குப் பதிலாகவே மெதனோல் பயன்படுத்தப்படுமெனக் கூறப்படுகிறது. இது நூறு மில்லி வோல்ட்டுக்களைக் கொணடதாக இருக்கும். இதனைப் பற்றரிகளைக் கொண்டும் இயக்கலாம் என சொல்லப்படுகின்றது. ஜப்பானின் முதற்தர இலத்திரனியல் நிறுவனமாகிய ரொசீபா கம்பனியின் அற்புதமான படைப்பு இதுவாகும். இது தன்னிச்சையாகவே சிறியளவு மின் ஓட்டத்தினைப் பிறப்பிப்பதால், எம்.பி.3 பிளேயரானது தன்னிச்சையாக இருபது மணித்தியாலயங்கள் இயங்கக்கூடியது. கடந்த வருடம் இதே கம்பனியால் வடிவமைக்கப்பட்ட லப்டொப் வகைக் கணினிகூட இந்தவகை மின்பிறப்பாக்கிகளினால் இயங்கக்கூடியதாக இருந்தது. ஆனாலும், 2005 ஆம் ஆண்டில் வர இருக்கின்ற மிக மிக சிறிய எரிபொருள்கலம் பலத்த எதிர்பார்ப்புக்களை உருவாக்கியிருக்கிறது.


# மொபைல் போனுக்குள் ரீவி





நோர்வே நாட்டில் கையடக்கத் தொலைபேசிகளில், தொலைக்காட்சியை புகுத்துவதற்கான வேலைகளில் அந்த நாட்டு தொலைக்காட்சி நிறுவனங்கள் இரங்கியிருக்கின்றன. அந்தவகையில் நோர்வேயின் ஒலிபரப்பு ஸ்தாபனம் மக்களுடைய மொபைல் போனில் 24 மணி நேரமும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைக் கண்டுகளிக்கக்கூடிய ஏற்பாடுகளை செய்திருக்கின்றன. ஒவ்வொரு மணித்தியாலமும் செய்திகள் ஒளிபரப்பப்படுகின்றன. இது மக்கள் மத்தியில் மொபைல் போனின் பாவனையை அதிகரித்துள்ளது. இதன்மூலம் தொலைக் காட்சிப் பெட்டிகளில் விற்பனையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதற்கான கட்டணமாக பாவனையாளர்கள் 20-40 வரையான ஸ்ரேலிங் பவுண்களை செலுத்தவேண்டியுள்ளது.

இதேவேளை - பீ.பீ.சியின் உலகச் சேவைகூட, கையடக்கத் தொலைபேசிகளில் வரலாமென கருதப்படுகின்றது. இதன் மூலம் மக்கள் மட்டுமல்ல மொபைல் போன் வியாபாரிகளும் கொள்ளை இலாபம் அடைகிறார்கள்.

# செயற்கை மலர்கள்





விஞ்ஞானிகளின் மிகச்சிறிய - அதாவது நனோ பூக்களைப் பயிரிட்டு, அதன்மூலம் புதிய புதிய பூவினங்களை உருவாக்கலாம் என்ற முடிவுக்கு வந்திருக்கிறார்கள்.

இதற்காக அவர்கள் சிலிக்கன், கலியம் ஆகிய மூலகங்களைப் பயன்படுத்தியுள்ளார்கள். இவை செயற்கைப் பூக்களாக இருந்தாலும், பார்ப்பதற்கு இயற்கையான பூக்கள் போலவே தோற்றுகின்றன. உண்மையிலேயே வெப்பநிலை மற்றும் அமுக்கத்தின் செல்வாக்கு தேவைப்படுகின்றது.

இந்த மூலகங்கள் வயர்கள் போன்று ஆக்கப்பட்டு நனோ மரங்களாகவும், பூக்களாகவும் உருவாக்கப்படும். இதன் மூலம், ஒரு புதிய வகையான சோலர் கலத்தினை உருவாக்கமுடியுமென விஞ்ஞானிகள் கருதுகின்றார்கள். இந்தவகை மரங்களுக்கு நீரினை ஊற்றும்போது, நீரும் ஒருவகையான இரசாயனத் தாக்கத்துக்கு உட்படுகின்றது.

இந்தவகையான மலர்களும், மரங்களும் கேம்பிறிஜ் பல்கலைக்கழகத்தில் காணப்படுகின்றது.

# குளிர்மையான ஒட்சிசன் தாங்கி



மாதக் கணக்கில் இல்லை. சிலவேளைகளில் வருடக்கணக்கில் விண்வெளியில் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கின்ற விண்வெளிப் பயணிகளுக்குத் தற்போது ஒட்சிசன் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கின்றது. இதன் காரணமாக அவர்கள் தங்களுடைய ஆராய்ச்சிகளைப் பாதியிலேயே விட்டுவிட்டு வரவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் தங்களுடைய பயணத்தினைத் தொடங்கியபோதே அவர்களுக்கு தேவையான ஒட்சிசன் அவர்களுடன் சேர்த்து அனுப்பப்படுகின்றது. ஆனால், அமுக்க வித்தியாசம் காரணமாக தேவைக்கதிகமான முறையில் ஒட்சிசன் பயன்படுத்தப்படவேண்டியிருப்பதால், கொண்டு செல்லப்படுகின்ற ஒட்சிசன் தாங்கிகள் எல்லாம் முடிவடைந்திருக்கின்றது. இதற்கெல்லாம் ஒரு தீர்வாக அமெரிக்காவில் நாஸா விண்வெளி ஆய்வுகூடம் வெப்பம் மற்றும் அமுக்கவேறுபாடுகளுக்குத் தாக்குப்பிடிக்கக் கூடிய குளிர்மையான தாங்கிகள் உருவாக்கியிருக்கின்றன. இதன்மூலம், விண்வெளி வீரர்கள் வெற்றிகரமாக வருடக்கணக்கில் ஆராய்ச்சிகளை செய்யக்கூடியதாக இருக்கும்.



நேர்காணல் — இரா.விஜேந்திரன்

# பாரம்பரிய கலையான கதகளியை புதுப்பொலிவு பெறச்செய்ய வேண்டும்



முன்னாள் இராமநாதன் நுண்கலைக்கழக பகுதிநேர நடன விரிவுரையாளரும், உரும்பிராய் கலைக் கோயில் நடனப்பள்ளி ஆசிரியையும், யாழ்.வலய நடன ஆசிரிய ஆலோசகரும் கதகளி நாட்டியத்தில் சிறப்பு பெற்றவருமான பத்மினி தெய்வேந்திர குமார் கதகளி தொடர்பாக எம்முடன் பகிர்ந்து கொண்டவற்றை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறோம்.

எனது குடும்பப் பின்னணி காரணமாக சிறுவயதில் கலாபவனம் சுப்பையா மாஸ்ரரிடம் பரத நாட்டியம் பயின்றேன். தொடர்ந்து கலைஞர் வேல் ஆனந்தன் மாஸ்ரரிடம் கதகளியும் கற்றேன். எனக்கிருந்த கலை ஆர்வமும் பக்தியுடன் கூடிய மரியாதையும் இந்தக் கலையை மேலும் தொடர என்னைத் தூண்டியது.

இதன் விளைவாக இந்தியா சென்று திருவனந்தபுரம், கேரளை ஆகிய இடங்களில் முறையே கதகளி, பரதம் ஆகியவற்றை நான்கு வருடங்கள் கோபிநாத் மாஸ்ரரிடமும், அடையாறு லகஸ்மணன் மாஸ்ரரிடமும் பயின்று 1978 ஆம் ஆண்டளவில் தாயகம் திரும்பினேன்.

இலங்கையின் பல பாகங்களிலும் கலைஞர் வேல் ஆனந்தன் குழுவினருடன் கதகளி நாட்டிய நிகழ்வுகளில் பங்குகொண்டேன். 1982 ஆம ஆண்டு எமது குழுவினருடன் வெளிநாட்டுச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு லண்டன், ஜேர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் நாட்டிய நிகழ்வுகளை நடத்தினோம். கதகளி கலைஞர்களை மதித்து அவர்களது நிகழவுகளைப் பார்ப்பதற்கென கலைஞர் கூட்டமே உருவாகியது. யாழ்ப்பாணத்தில் பெரு வளர்ச்சியில் தனக்கென தனியான இடத்தை வகித்தது கதகளி.

1983 ஆம் ஆண்டிற்குப் பின்னர் அதன் தனித்துவத்தை இழக்கத் தொடங்கியது. இரு தசாப்தகால இடைவெளியின் பின்னர் ஓரளவு துளிர்விடத் தொடங்கியுள்ள கதகளி மீண்டும் பழைய நிலைக்குவரும். வர வேண்டும் என்பதே இந்தத்துறை சார்ந்தவர்களின் ஏக்கமாகும்.

பரதம், கதகளி இவற்றிலே வேறுபாடுகள் நிறையவே இருக்கின்றன. இருந்தும் பரதம் பயின்ற மாணவர்கள் இலகுவாகவும் விரைவாகவும் கதகளியை பயிலமுடியும். அபினயப் பகுதி, ஆடடப்பகுதி என இரு பகுதிகள் உள்ளது. பரதத்தில் ஆரம்பப் பயிற்சியினை அடவு எனவும் கத களியில் ஆரம்பப் பயிற்சியினை சுவடு எனவும் அழைக்கின்றனர்.

கதகளி கதையை அடிப்படையாகக் கொண்டு மற்றோரை மகிழ்விப்பதற்காக ஆட்டத்துடன் கதையை இலகுவாகப் புலப்படுத்துவதாக அமைகின்றது.



பத்மினி தெய்வேந்திரகுமார்

புராதன இதிகாசங்களை கதகளியின் ஊடாக நாட்டிய நாடகமாக வெளிப்படுத்தி கலைஞர்களை மகிழவிப்பதற்காகவும் கதகளி ஆட்டத்திற்கு முக்கியத்துவ மிருக்கின்றது.

கதகளியில் தனிநபர் ஆட்டம் 1982 ஆம் ஆண்டு ஆரம் பிக்கப்பட்டது. இதில் தோடயம், புறப்பாடு, மேளப்பதம் இவற்றைக் கொண்டு கோபிநாத் ஆசிரியர் கதகளியை தனி நடனமாக்கினார். இதனை நானும் செய்து வருகின்றேன்.

கதகளியைப் பொறுத்த வரையில் ஒப்பீட்டு ரீதியில் ஆண்கள்தான் அதிகம் பயின்றவர்கள், பயில்கிறார்கள், இந்தத்துறையில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்கள். பட்டம் பெற்ற மாணவிகள், பாடசாலை மாணவிகள் என அதிகளவான பெண்கள் என்னிடமே இந்தக் கலையைப் பயின்று வருகின்றார்கள்.

ஆரம்பகாலங்களில் இருந்த விதிமுறைகள், பெண்கள் சம்பந்தமான பிற்போக்கான சிந்தனைகளே கதகளி ஆண்களால்தான் செய்யமுடியும் ஆண்கள்தான் செய்ய வேண்டும் என்ற ஒரு நெறிமுறை நிலவியது. இது 1985 ஆண்டுகளிற் குப்பின் முடிவுற்றது என்றே கூறவேண்டும்.

கதகளி நடனத்தைப் பொறுத்த வரையில் மிக இலகுவாகவும் தெளிவாகவும் பாத்திரத்தை இனம் காட்டலாம். வேட உடை, வர்ணப்பூச்சு, ஆபரண அலங்காரம் இவற்றினால் ஒருவரை பாத்திரமாக்வே மாற்ற முடியும். அசுரன் என்ற பாத்திரமேற்றவர் நடந்து வருகின்றார் என்றால் மிக இலகுவாக கதகளி நாட்டிய முறையின் ஊடாக வெளிப்படுத்தலாம்.

இதை ஏன் சொல்கிறேன் என்றால் நாட்டிய நாடகங்கள், தனிநபர் நடன நிகழ்வுகளைப் பொதுவாக இத்துறை சார்ந்தவர்களைத் தவிர ஏனையோரால் அசைவுகளுக்கான அர்த்தங்களை விளங்கிக் கொள்ள முடிவதில்லை.

பட்டச் சான்றிதழைப் பெற்றவுடன் இன்றைய மாணவர்கள் தாம் முழுமையாக இந்தத் துறையில் கற்று விட்டோம் என நினைக்கிறார்கள். இவர்களின் தவறான கணிப்பு களையப்படவேண்டும். நடனத் துறையைப் பொறுத்தவரையில் கற்பதற்கு எவ்வளவோவுள்ளது.

பரத நாட்டியத்தைப் பொறுத்த வரையில் பாடத் திட்டத்தில் மாற்றம் கொண்டுவரப்பட வேண்டும். இப்பொழுது O/L பரீட்சைக்கு செய்முறைப் பரீட்சை இல்லை எழுத்துப் பரீட்சைக்கே புள்ளி வழங்கப்படுகிறது.

இதனுடன் கணிப்பீட்டுப் புள்ளிகளையும் இணைத்துக் கொள்கிறார்கள். முன்பு செய்முறைப் பரீட்சை இருந்தது. வேறு இடத்து ஆசிரியர்கள் மேற்பார்வையாளராகக் கடமையாற்றுவர் இதனால் பிள்ளைகள் அதிகளவில் கவனம் எடுத்து தொடர்ந்து பயிற்சிகளை மேற்கொள்வர்.

ஆனால் இந்தச் செயற்பாடுகளை இப்பொழுது காணமுடிவதில்லை. இதற்கு மாணவர்களை மட்டுமே குறம் சொல்லமுடியாது. எமது பாடத்தைப் பொறுத்தவரையில் ஆடல் பயிற்சி மிக முக்கியம். எவ்வளவு கடினமாகப் பயிற்சிகளை மேற்கொள்கிறோமோ அவையே பெரும் பயனாக இருக்கும்.

நடன அமைப்பு முறைகளில் பாரம்பரிய நெறிமுறைகள் இப்பொழுது கடைப்பிடிக்கப்படுவதில்லை. ஆசிரியர்களும், மாணவர்களும் தமக்கு இசைவான வர்ண உருப்படிகளைத் தெரிவுசெய்வதுடன் அதிலும் மாற்றங்களை செய்கிறார்கள். இதனால் நடன அமைப்புக்களில் கலப்பு வர்ண, உருப்படிகளை இப்பொழுது காண முடிகிறது. இவ்வாறான பாரம்பரியங்கள் மீறப்படுவதற்கு குருபக்தி இல்லாமையும் ஒரு காரணமாகும குருபகதி இருக்குமானால் கலை மீது பயம் இருக்கும். பயின்றவற்றை அதன் தனித்துவத்தை மீறாது கற்பிக்க முடியும்.

ஐரோப்பிய நாடுகளில் கலைகள் கட்டி வளர்க்கப்படுகின்றன. கலைஞர்களை உருவாக்குகின்றார்கள். புலம்பெயர்ந்து வாழும் கலைஞர்களின் அயராத முயற்சிகளின் பலனாக பல போட்டி நிகழ்வுகள் இடம் பெறுகின்றன. இவற்றிலே பரத நாட்டியத்துக்கு முக்கியத்துவமுண்டு. நான் கடந்த 2000 ஆம் ஆண்டுமுதல் தொடர்ச்சியாக லண்டன். சுவிஸ், ஜேர்மன் ஆகிய நாடுகளில் இடம் பெற்ற நடனப் போட்டிகளுக்கு நடுவராகச் சென்றுள்ளேன். கலை, பண்பாடு, கலாசாரத்தைப் பேணுவதில் தீவிரமாக செயற்பட்டுவரும் புலம் பெயர் வாழ் தமிழ் மக்கள் தமது பிளளைகளுக்கு எமது பாரம்பரிய கலைகளைப பயிற்றுவித்துவருகிறார்கள். பரத நாட்டிய அரங்கேற்றங்கள்கூட இடம்பெறுகின்றன.

எனது சகோதரி சுவிஸில் கலைக் கோயில் என்ற நடனப் பள்ளியைக் கடந்த ஐந்து வருடமாகச் செயற்படுத்தி வருகிறார்.

கதகளிக்கான சந்ததி கடந்த இரு தசாப்தமாக நலிவடைந்து அது சார்பான கலைஞர்களும் இந்தத்துறையில் இருந்து வெளியேறிவிட்டனர். கதகளியை பழைய நிலைக்கு கொண்டு வருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. துறைசார் கலைஞர்களிடம் அழுத்தங்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன. இவை செயல்வடிவம் பெறவேண்டும். என்பதே கலைஞர்களின் எதிர்பார்ப்பாகும். ஆனால் உரிய அமைப்புக்களும் அதிகாரிகளுமே இதனை செயல்படுத்த முன்வருவதில்லை.

இன்று கதகளியை பயில்வதற்கென ஒரு பகுதியினர் மிகுந்த ஆர்வத்துடனுள்ளனர். தனியே ஒரு பயிறசிக்காக அல்லது பரதம் படித்துவிட்டேன் கதகளியையும் படிப்பம் என்ற மனநிலையான மாணவர்கள் கொணடுள்ளனர். இம் மாணவர்களின் இவ்வாறான மனநிலை நியாயமானதே. ஏனெனில் வடஇலங்கை சங்கீத சபையால் கதகளிப் பரீட்சை நடத்தப்பட்டது. இராமநாதன் நுண்கலைக் கழகத்தல் கதகளி டிப்ளோமா தரச் சான்றிதழுடன் கற்பிக்கப்பட்டது. பாடசாலைகளில் அழகியல் பாடங்களில் ஒன்றாக சேர்ப்பிக்கப்பட்டிருந்தது.

இவைகள் எல்லாம இப்பொழுது இல்லை. இந்தநிலை மாற வேண்டும். இதற்குப் பொறுப்பானவர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

கதகளியை யாழ்.பல்கலைக் கழக இராமநாதன் நுண்கலைக் கழகத்தில் பரத நாட்டிய கற்கை நெறியை மேற்கொள்பவர்களுக்கு துணைப் பாடமாக கொண்டுவர வேண்டும்.

பாடசாலைகளிலும், சாதாரண தரம், உயர்தரத்திலும் கதகளியை இணைக்க வேண்டும். போட்டிகள், பரீட்சைகள், பயிற்சி நிலையங்கள் என மாணவர்களை முனைப்புடன் கற்க வழிவகை செய்யவேண்டும். இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டால் நலிவடைந்து போயுள்ள கதகளியை புதுப்பொலிவுடன் மிளிரச் செய்யலாம்.

> **பட்டச் சான்றிதழைப் பெற்றவுடன் இன்றைய மாணவர்கள் தாம் முழு மையாக இந்தத் துறையில் கற்று விட்டோம் என நினைக்கிறார்கள். இவர்களின் தவறான கணிப்பு களையப்படவேண்டும். நடனத் துறையைப் பொறுத்தவரையில் கற்பதற்கு எவ் வளவோவுள்ளது. பரத நாட்டியத்தைப் பொறுத்த வரையில் பாடத்திட்டத்தில் மாற்றம் கொண்டு வரப்படவேண்டும்.**

மருத்துவம் — எஸ்.ஜெயா

# பலசரக்குகளும் மருத்துவ குணங்களும்

**அதிமதுரம்**

நாவறட்சி, விக்கல், காமாளை, சிரநோய், எலும்புருக்கி, நாட்பட்ட மூல வியாதி, உட்சூடு இவை போகும். இதன் சூரணத்தை தேனில் எடுக்கவும்.

**கறுவா (இலவங்கம்பட்டை)**

விசங்கள், வாதம், சுவாசகாசம், கிரகதோசம் நீக்கும். மூளை, இருதய பலமுண்டு.

**ஏலக்காய்**

நீர்ப்பேதி, பித்தமயக்கம், விக்கல், வாந்தி, வயிற்றுவலி நீங்கும்.

**ஓமம்**

குளிர்சுரம், இருமல், சுவாசகாசம், சீதபேதி, அசீரணம் நீங்கும்.

**கடுகு**

இதன் சூரணத்தினை 1/8 வாரகன் பாயாசத்தில் கலந்து கொடுக்க தலை, மூளை, உள்ளுறுப்பு, நீர்ப்பை கற் கள் என்பவற்றை அகற்றும் ஞாபக சக்திகூடும் (வெண் கடுகு வேறு பட்ட இயல்புகளைக் கொண்டது)

**கடுகுரோகணி**

மலபந்தம், வாதகோபம், கரப்பான், கபாதிக்கம் இவை விலகும். இதன் சூரணத்தினை 1/2 வராகன் கொடுக்க (வென்னீரில் இரண்டு வேளை) சலப்பைக் கற்கள் வெளியாகும். இரப்பை சுத்தமாகும். இது நாட்டுக் கடுகு ரோகினிக்கே பொருந்தும். வேறு இனங்கள் அளவு அதிகப்படின் விஷமாகும்.

**கராம்பு**

கராம்பை ஒரு சட்டியில்போட்டு வதக்கி வாயில் போட்டு மென்றால் தொண்டைப்புண் ஆறும். இதை நீர் விட்டு அரைத்து நெற்றியில் பற்றுப் போட்டால் தலைப்பாரம், சளித் தொல்லை நீங்கும்.

**கோப்பிக் கொட்டை**

பித்தம் உண்டு, வயிற்றுப் போககினைக் கட்டுப்படுத்தும்

**காச்சுக்கட்டி**

மலத்தினுள்ள கறுப்பு நிற கிருமிகளை ஒழிக்கும் வல்லமை கொண்டது.

**கொத்தமல்லி**

உட்சூடு, சுரம், அசீரணம், நாவறட்சி, ஏப்பம் இவை நீங்கும். வறுத்து இடித்து சீனா கற்கண்டு கூட்டி 1/4 ரூபா எடை தினமும் இரண்டு மூன்று வேளை சாப்பிட்டு வர அசீரணம், விக்கல், நெஞ்செரிவு, சிரசில் உண்டாகும் பிணிகள், கண்ணீர் வடிதல், பார்வை மந்தம், இடுப்புவலி, கல்லடைப்பு, வாய்பிதற்றல் என்பன நீங்குவதுடன் மனோசக்தி வலுவடையும்.

**சாதிக்காய்**

பித்தம், மயக்கம்கூடும், உஷ்ண வாத ரோகங்கள் விலகும். இரப்பை, ஈரல்கள் வலுவாகும். சிறு அளவில் கொடுக்கவும்.

**சாறணை (சாறுவேளை)**

காமாளை, பாண்டு, கபம் இவை நீங்கும். மண்ணீரல் பலமடையும்.

**சித்தரத்தை**

பித்தம், கரப்பான், திரிதோசம், சீத ளம், பலசுரம், காசம் இவை நீங்கும்

**சீரகம்**

வாந்தி, வயிற்றுவலி, காசம், வாதா திக்கம், பீநிசம், பித்தம் இவை விலகும் மேலும் உறுதியும் கண் குளிர்ச்சியும் தரும்.

**சுக்கு**

சகல ரோகங்களுக்கும் உபயோகப் படத்தக்கதாகும். பஞ்சுபோல நறுக்க! ஒரு சீலையில் முடிந்து காதில் செருகிவைக்க காதடைப்பு, களைப்பு நீங்கும். நெற்றிக்குப்போட தலைவலி நீங்கும்.

**சோம்பு**

சூரணம் செய்து மூன்றுவேளை பத்து குன்றிமணி அளவு எடையில் கொடுக்க சுரம், அசீரணம், கப இருமல், தும்மற்பீநிசம் என்பன நீங்கும்.

**வால்மிளகு**

குன்மம், திரிதோஷகோபம், வெட்டை இவை நீங்கும், சிறுநீரை சுத்தப்படுத்தும் வாயுவைக் கண்டிக்கும்.

**திற்பலி**

இருமல், வீக்கம், வாதசுரம், கபம் இவை போகும். இரப்பை, ஈரலுக்கு பலத்தைக் கொடுக் கும்.

**பெருங்காயம்**

தந்தரோகம், சர்ப்ப விஷம், அசீரணம், வாதாதிக்கம், எண்வகைக் குனமம், உதரரோகம், கபநோய், குடைசசல், யொனிரோகம் இவைகள் கெடும். நரம்பு ஒழுங்கீனத்தால் உருவாகும் பல நோய்களை நீக்கும் தன்மை கொண்டது.

**வெந்தயம்**

கண்மந்தம், பேதி, இரத்தபித்தம், காசம், உட்சூடு, சீதக் கழிச்சல் இவை விலகும்.

**மிளகு**

குளிர்சுரம், பாண்டு, கபம். இருமல், அசீரணம், குன்மம், வாயு, பித்தம், செவிவலி இவை நீங்கும். இதை வறுத்து இடித்து சூரணம் செய்த தேனில் கொடுப்பது நன்று.

**மரமஞ்சள்**

மூலநோய், உட்சுரம், கணச்சூடு விலகும் இது விசத்தடுப்பிற்காக குடிநீராகப் பயன்படுத்தப்படுகின்றது.

**கஸ்தூரிமஞ்சள்**

கரப்பான், கிருமிரோகம், அக்கினி மந்தம் நீங்கும். அறிவு விருத்தியாகும்.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*வாள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக*
*கேள்போல் பகைவர் தொடர்பு.*

திருக்குறள்

# நமது நோக்கு

## சமாதானத்தை நிராகரிக்கும் ஜனாதிபதியின் யுத்த கங்கணம்!

சமாதான பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்குவதற்கு ஏதுவான சூழ்நிலையொன்றை உருவாக்கும் எண்ணக்கிடக்கை ஏதும் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு இல்லை என்பதும் அதற்கான வாய்ப்பினை அவரால் ஏற்படுத்த முடியாது என பதும், இப்போது மறுபடியும் அவரது புதிய கருத்து நிலைப்பாட்டின் மூலம் தெளிவாக்கப்பட்டுள்ளதாகவே கூறவேண்டும். மீண்டும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அமைதிப் பேச்சுக்களை ஏற்கனவே விட்ட இடத்திலிருந்து அதாவது - இடைக்கால நிர்வாக அதிகாரசபை குறித்த விடயத்திலிருந்து ஆரம்பிக்க வேண்டுமென்ற தமிழர் தரப்பின் ஏகப்பிரதிகளான விடுதலைப் புலிகளின் சரியானதும், நியாயபூர்வமானதுமான நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்ளும் மனோதர்மம் அரசுக்கு எள்ளளவும் இல்லை என்பதையே ஜனாதிபதி தன்னைச் சந்தித்த நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சொல் ஹெய்மிடம் தெரிவித்த கருத்துக்கள் நிரூபித்துள்ளன.

ஜனாதிபதி சந்திரிகாவினால் அவரது நிறைவேற்று அதிகாரப்பலத்தைப் பிரயோகித்து அரசியல் உள்நோக்கங்களுடனும், சமாதான முன்னெடுப்பு முயற்சிகளை குழப்பும் பேரினவாத திட்டத்துடனும் பதவி நீக்கம் செய்யப்பட்ட ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் நடாத்திவந்த இரண்டாண்டுக்கும் மேலான சமாதானப் பேச்சுவார்த்தைகளை அதன் ஆரம்ப கட்டத்திலிருந்தே அங்கீகரிக்க விருப்பற்ற ஒருவராகவே ஜனாதிபதி இருந்தார் என்பது வெளிப்படையான உண்மையாகும்.

ஜனாதிபதியின் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு தமிழ் மக்களுக்கு எதிராக ஏழாண்டு காலம் நடாத்திய கொடூர மனித நேயமற்ற காட்டுமிராண்டித்தனமான நாட்டின் வளத்தையெலலாம் கொட்டி நடத்திய போரில் வரலாறு காணாத மாபெரும் தோல்வியைச் சந்தித்து அவமானப்பட்டதையடுத்து மக்களால் தூக்கியெறியப்பட்ட வரலாறு தெரிந்ததே.

யுத்தத்தில் தனது தலைமைக்குக் கிடைத்த அவமானம் கரமான தோல்வியானது முப்படைத்தளபதி என்ற வகையில் அவரால் இன்று வரை ஜீரணிக்கமுடியாத ஒன்றாக உள்ளமையே சமாதான முயற்சிகளைக் குழப்பும் அவரது ஆழ்மன சுவாசத்திற்கு காரணமாகும்.

ஐ.தே.க முன்னணி ஆட்சிக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட சர்வதேச சமூகத்தின் அனுசரணை மற்றும் ஆதரவுப் பின்னணியுடனான போர்நிறுத்தம் மற்றும் புரிந்துணர்வு உடன்பாட்டினை ஜனாதிபதி ஒருபோதுமே உளமார ஏற்றுக்கொண்டதில்லை. தன்னுடன் கலந்தாலோசிக்காது அப்போதைய பிரதமர் தன்னிச்சையாக மேற்கொண்ட உடன்படிக்கை அவை என்று அவர் வெளிப்படையாகவே குற்றஞ் சாட்டியதுமுண்டு.

பின்னர் சமாதான முன்னெடுப்புக்களின் ஒவ் வொருகடடம் குறித்தும் ரணில் விக்கிரமசிங்கவும், நோர்வே அனுசரணையாளர்களும் ஜனாதிபதிக்கு விளக்கங்களை அளித்து வந்தபோதும் அவர் அதில் ஆர்வமோ, அக்கறையோ கொண்டது கிடையாது. மாறாக அந்தச் சமாதானப் பேச்சுக்களை நேரடியாகவும், மறைமுகமாகவும் குழப்பிச் சிதைப்பதற்கான பல்வேறு மூலோபாயங்களை வகுத்துச் செயற்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கதே. முப்படைத் தளபதி தான் என்ற முறையில் படைத்தரப்பின் கட்டுப்பாட்டை தனக்குள் வைத்துக்கொண்டு அவர்களைப் பயன்படுத்தி கடலிலும், தரையிலும் மீண்டும் ஒரு போர்ச்சூழ்நிலையை உருவாக்கும் வகையில் விடுதலைப் புலிகளை சீண்டிச் சினமேற்றும் முயற்சிகளை மேற்கொண்டார் என்பதும் வெளிப்படையான உண்மையே.

ஆக - எல்லவகையிலும் ஜனாதிபதி சமாதானத்தின் மீதான அக்கறையற்ற ஆனால், அதுகுறித்து வெறுமனே பேசிக் காலம் கடத்தும் தந்திரகாரியாகவே எப்போதும் தன்னை அடையாளப்படுத்தி வந்துள்ளார்.

இம்முறையும் ஆட்சிக்கு வரமுன்னர் சமாதானத்திற்கு எதிரான அணிகளுடன் கூட்டுச்சேர்ந்து கொண்டு அதற்கு எதிரான கூக்குரல்களையே பிரசாரம் செய்த ஜனாதிபதி, ஆட்சியை அறுதிப் பெரும்பான்மை வலுவற்ற நிலையில் கைப்பற்றியதும் திடீரென சமாதானம் குறித்துப் பேசத்தொடங்கிய போதே, இதுவும் மற்றொறு உள்நோக்கத்துடன் கூடிய தந்திரோபாயம் என்ற சந்தேகம் தமிழ் மக்கள் மத்தியில் உருவானது.

இப்போது அந்தச் சந்தேகம் பல்வேறு வகையிலும் ஊர்ஜிதமாகி வருகிறது. ஒருபுறம் படைத்தரப்பைப் பலப்படுத்தி போருக்கான தயார்படுத்தலை மேற்கொண்டவண்ணம், மறுபுறம் சமாதானத்தைப்பற்றி வெறும் பேச்சளவில் அளந்துகொண்டு சர்வதேச கடன்நிதியைப் பெற்றுக்கொள்ளும் திட்டத்தை நிறைவேற்ற முயன்றார் என்றால் அது உண் மையே ஆகும்.

அது சாத்தியமற்றதாகி வரும் நிலையில் மீண்டும் யுத்தத்தை தொடங்கி மக்களின் மனங்களை திசை திருப்பி, தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாத நிலையில் இருந்து தன்னையும் பேரினவாதிகளின் நெருக்கங்களிலிருந்து அரசையும் பாதுகாக்க முயல்கிறார்.

அதன் வெளிப்பாடே அவரது புதிய, சமாதானம் குறித்த, அரச நிலைப்பாடாகும். ஜனாதிபதியின் இந்த நிலைப்பாடு, சர்வதேச சமூகத்தின் ஆலோசனை மற்றும் அங்கீகாரத்துடன் உருவாக்கிய விடுதலைப்புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை தொடர்பான யோசனைகள் அடங்கிய வரைபை நிராகரித்துள்ளதுடன், சர்வதேசத்தின் சமாதான அனுசரணையையும் நிராகரித்ததாகவே அமைகிறது. இதனை சர்வதேச சமாதான ஆர்வலர்கள் புரிந்துகொள்ள வேண்டும். ஜனாதிபதி தனது செயற்பாடுகள் மூலம் நாட்டை 1995 ஆம் ஆண்டு நிலைக்குள் தள்ள முயல்கிறார்.

இன்னும் அவர் சமாதானத்துக்கான யுத்தம் என்ற தனது போர்வெறிக் கோட்பாட்டிலிருந்து விலகவில்லை என்பதை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளையே தொடர்கிறார் எனில்...

- மீண்டும் போருக்கு தயாராகிறார் என்றே அர்த்தம் கொள்ள வேண்டும். அப்படியாயின் இலங்கையை மீண்டும் அதலபாதாளத்துக்குள் மீள முடியாத நிலைக்குள் தள்ள ஜனாதிபதி மூர்க்கம் கொண்டு வருகிறார் என்ற தீர்மானத்திற்கு எச்சரிக்கையுடன் வரவேண்டியது தவிர்க்கமுடியாததே...!

# நாடும் நடப்பும்




# கரும்புலிகள் தினப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு நேற்று பரிசளிப்பு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் ஏற்பாட்டில் கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட கவிதை, கட்டுரை, சிறுகதைப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு பரிசில்கள் வழங்கும் நிகழ்வுகள், நேற்றுக் காலை 11 மணியளவில் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்விற்கு சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் தலைவர் பகீரதன் தலைமை தாங்கினார். யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, தமிழீழ மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி, பேராசிரியர் எஸ்.சண்முகலிங்கன், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செ. கஜேந்திரன், திருமதி பத்மினி சிதம்பரநாதன், அரச அறிவியற்துறை விரிவுரையாளர் கே.ரீ.கணேசலிங்கம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

சிறப்புரைகளைத் தொடர்ந்து - கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள், பதக்கங்கள், சான்றிதழ்கள் என்பன வழங்கப்பட்டன.

பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் போன்றோரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

**நீண்ட காலமாக**

## கோண்டாவில் - கொக்குவில் வீதி புனரமைப்பு செய்யப்படவில்லை!

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட கோண்டாவில் சந்தி முதல் கொக்குவில் சந்தி வரையான வீதி நீண்ட காலமாகச் செப்பனிடப்படாமல் உள்ளமை குறித்துப் பொதுமக்கள் கவலை தெரிவித்தனர்.

நாளாந்தம் பொதுமக்கள், உத்தியோகத்தர்கள், மாணவர்கள் எனப் பலதரப்பட்டவர்கள் பயன்படுத்தும் இந்த வீதி குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது. இதனால், இந்த வீதி ஊடாகப் பயணம் செய்யும் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த வீதி செப்பனிடப்படாமை குறித்து கவலை தெரிவித்த பொதுமக்கள் - உரியதரப்பினர் உடனடியாக இந்த வீதி செப்பனிடப்படுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனக் கோரியுள்ளனர்.

## ஜேர்மன் வெளிவிவகார அமைச்சின் குழு 17 ஆம் திகதி இலங்கை வரவுள்ளது!

(கொழும்பு)

ஜேர்மன் நாட்டின் வெளிவிவகார அமைச்சர் தலைமையிலான உயர்மட்டக் குழுவொன்று இந்த மாதம் 17 ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ளது.

இரண்டு தினங்கள் இலங்கையில் தங்கியிருக்கும் இவர்கள் அரசியல் தலைவர்கள் மற்றும் தொழிலதிபர்களைச் சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளனர்.

ஜனாதிபதி சந்திரிகா, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோரையும் சந்தித்துப் பேசவுள்ளனர்.

இந்தச் சந்திப்புக்களின்போது இரு நாட்டு உதவிகளின் அடிப்படையில் பேச்சுக்கள் இடம்பெறவுள்ளன. சீனா, பங்களாதேஷ், இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுடன் இலங்கைக்கும் வருவதற்காக 10 நாள் விஜயத்தினை மேற்கொண்டுள்ளதாக ஜேர்மனிய வெளிவிவகார அமைச்சின் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

## பூநகரி பிரதேசத்தில் குடிநீர் தட்டுப்பாடு

(ஆழியவளை)

பூநகரி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பல கிராமங்களில் குடிநீருக்கு பலத்த தட்டுப்பாடு நிலவி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இங்கு மக்கள் இலகுவாக குடிநீரைப் பெறும் வகையில் வைக்கப்பட்டுள்ள குடிநீர் கொள்கலன்களில் கடந்த பல வாரங்களாக குடிநீர் இல்லாததால் பொதுமக்கள் தமக்கு தேவையான குடிநீரைப் பெறுவதற்கு பல மைல் தூரம் கால் நடையாக நடந்து சென்று குடிநீரைப் பெற வேண்டியுள்ளதாக அந்தப் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். (122)

**- நிகொட் நிறுவன ஏற்பாட்டில் -**

## காலை உணவு வழங்கும் பாடசாலைகளுக்கு சமையல் பாத்திரங்கள் வழங்கவுள்ளது

(ஆழியவளை)

உலக உணவுத் திட்டத்தின் கீழ் காலை உணவு வழங்கப்படவுள்ள பாடசாலைகளுக்கு சமையல் பாத்திரங்களை நிகொட் நிறுவனம் வழங்கவுள்ளது. இதற்கென நிகொட் நிறுவனம் 20 மில்லியன் ரூபாவினை ஒதுக்கீடு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வருடம் முதல் காலை உணவு வழங்க தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு நிகொட் நிறுவனம் சமையலறைகளை அமைத்துக் கொடுத்துள்ளது. (122)

## நல்லூர் உற்சவகால ஏற்பாடுகள் மாநகர சபையால் மேற்கொள்ளப்படுகிறது

ஒகஸ்ட் மாதம் ஆரம்பமாகவுள்ள நல்லூர் ஆலய வருடாந்த உற்சவத்திற்கான ஏற்பாடுகள் யாழ்.மாநகர சபையினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

சுகாதார சேவைகள், தண்ணீர் வசதி மற்றும் உற்சவ காலத்தில் விற்பனை நிலையங்கள் அமைக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் முதலிய பல்வேறு ஏற்பாடுகள் யாழ்.மாநகர சபையினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நாட்டில் தற்போது நிலவி வரும் சமாதான சூழலை அடுத்து, பெருமளவான பக்தர்கள் நல்லூர் ஆலய வருடாந்த உற்சவத்திற்கு வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

## சீருடைத் துணிகளைப் பெற்றுக்கொள்ளுமாறு நல்லூர் பிரதேச செயலர் அறிவிப்பு

நல்லூர் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான இலவச சீருடைகளை உடனடியாகப் பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகின்றது.

நல்லூர் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களில் இதுவரை சீருடைத்துணிகளைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் எதிர்வரும் 9 ஆம் திகதிக்கு முன்னர் தத்தமது கிராம அலுவலர்கள் ஊடாக தமது சீருடைகளை பெற்றுக்கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது.


அவ்வாறு பெற்றுக் கொள்ளத் தவறும் மாணவர்களது சீருடைகள் பிரதேச செயலகத்தால் யாழ்.செயலகத்துக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படவுள்ளது.

சர்வதேச அரசியல்

கே.ரி.கணேசலிங்கம்


நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்படும் சதாம்

# நீதியற்ற நீதிமன்றத்தில் சதாம் ஹுசைனும் ஈராக்கும்


ஜோர்ஜ் புஷ்

சமகால சர்வதேச அரசியலின் வரலாறு - ஈராக் விவகாரத்தை மையப்படுத்தியே எழுதப்பட்டு வருகிறது. அடிக்கடி உலகளாவிய அரசியல், திசை திருப்பப்பட்டாலும் கடந்த பல ஆண்டுகளாக ஈராக் அரசியலே நிர்ணயமான தாக்கத்தைச் சர்வதேச வல்லரசுகளுக்கு ஏற்படுத்தி வந்திருக்கின்றது. அதிகாரத்துக்கான இழுபறியில் அமெரிக்கரும், அவர்களின் கூட்டாளி நாடுகளும் ஒரு பக்கமாக அமைய, ஈராக்கிய தீவிரவாத சக்திகள் மறுபக்கமான போக்கு - கடந்த இரண்டு ஆண்டுகளாக நீடித்தது. தற்போது அமெரிக்கர்கள் பறித்தெடுத்த அதிகாரத்தை மீளவும் ஈராக்கியர்களிடம் ஒப்படைத்து விட்டதாகக் கூறுகின்றனர். இடைக்கால அரசோடு மீண்டும் சதாம் ஹுசைன் அரங்குக்குக் கொண்டு வரப்பட்டுள்ளார். எனவே, இடைக்கால அரசின் அதிகார கைமாற்றத்தையும், சதாம் ஹுசைன் மீதான விசாரணையையும் பரிசீலிப்போம்.

இடைக்கால அரசுக்கான அதிகாரத்தை அமெரிக்கா திடீரென கையளித்துள்ளது. உலக மட்டத்தில் பிரசாரப்படுத்தப்பட்டதைவிட இரண்டு நாட்கள் - முன்கூட்டியே ஒப்படைத்துவிட்டு அமெரிக்க நிர்வாகி, போல் பிறீமர் அமெரிக்கா திரும்பினார். பாதுகாப்புக் காரணங்களுக்காகவே அமெரிக்கா அவ்வாறு முன்கூட்டியே ஈராக்கியரிடம் அதிகாரத்தை ஒப்படைக்கும் நிகழ்வை ஆற்றியதென்றும், ஆடம்பரமற்ற விதத்தில் அதனை நிகழ்த்தியதாகவும் தெரியவந்துள்ளது. இஸ்லாமிய தீவிரவாதத்தின் தாக்குதல்கள் எப்படி? எங்கே? எப்போது? நடக்குமென்ற அச்சஉணர்வு அமெரிக்கர்களுக்கு ஏற்பட்டுவிட்டது என்பதையே இந்த நிகழ்வு காட்டுகிறது. வெளிப்படையாகவே அமெரிக்க ஆளும்வர்க்கம் தாம் அச்சமடைவதென்பதை உலகத்திற்கு உணர்த்திவிட்டது. அமெரிக்க இராணுவத்தின் உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் அதிகாரக் கைமாற்றல் நிகழ்வு நடைபெற்றுள்ளது. அங்கு உரையாற்றிய இடைக்கால பிரதமர் இயட் அல்லாவி, இது 'ஒரு வரலாற்று முக்கியத்தும் வாய்ந்த நாள்' என்றார். ஈராக்கியர்கள் அனைவரும் இந்நாளுக்காக காத்திருந்தனர். இது ஒரு மகிழ்ச்சியான நாள் என்று முழங்கினார். இந்த இடைக்கால அதிகாரக் கைமாற்றல், ஈராக்கின் அரசியலில் பல பரிமாணங்களை ஏற்படுத்தியுள்ளது.

குறிப்பாகத் தீவிரவாத அரசியல் தலைமைகளை முறியடித்து ஒரு மிதவாத அரசியல் தலைமையை உருவாக்கும் முயற்சி வெற்றி பெற்றுள்ளது. மிதவாத அரசியல் தலைமைகள் ஜனநாயகத்தின் காவலர்களாகவும். மேற்குலகத்தின் பிரதிநிதிகளாகவும் விளங்குவார்கள் என்பதுடன், தமது நலனுக்காக நாட்டையோ, மக்களையோ விலை பேசக் கூடியவர்களாகவும் இருப்பர். தந்திரத்தையும், அரசியல் நழுவல்களையும் கையாளும் இக்கூட்டம் ஈராக்கின் ஆட்சியில் முதற்தடவையாக அமர்த்தப்பட்டுள்ளனர். ஈராக்கைச் சுரண்டி ஏப்பம் விடும் கூட்டமாகவே காணப்படும். இதனையே உயர் குழாம் என இன்னோர் விதமாக அழைத்துக் கொள்வார்கள். இவர்கள் கனவான்கள் போன்று காணப்படுவார்கள். கீழைத்தேசம் முழுவதும் இந்த வர்க்கத்திடம் அகப்பட்டுள்ளதே மேற்குக்கும் அதன் அரசியல், பொருளாதார, இராணுவ மேலாதிக்கத்துக்கும் கிடைத்த அதிஷ்டமாகும். இதனை மேற்காசியாவில் பல நாடுகளின் அரசியல் தலைமையகம் தவிர்த்தேயிருந்தனர். ஆனால், அமெரிக்காவின் பிரயத்தனத்தால் அது முறியடிக்கப்பட்டுவிட்டது. சதாம் போன்ற அரசியல் தலைமைகள் தப்பிப் பிழைப்பது கடினம்.

அடுத்து அமெரிக்க ஆட்சியாளர்களுக்கு பொம்மை அரசொன்று ஈராக்கில் கிடைத்துள்ளது. அமெரிக்கர்களிடமிருந்து வரும் வேதவாக்குகளை அமுலாக்குவதே ஈராக்கிய இடைக்கால அரசின் பணியாக இருக்கும். தீவிரவாதத்தை அழிப்பதே புதிய ஈராக் பிரதமரின் முதற் பிரகடனமாக உள்ளது. இத்தகைய பிரகடனத்துடன் ஈராக்கை எப்படி ஈராக்கியர் ஆளலாம் என்பதை புரிந்து கொண்டால் இடைக்கால அரசின் முழுப்பலமும் அமெரிக்கா என்பது புலனாகும்.

ஈராக்கிய மக்களுக்கு போலியான ஜனநாயகம் கிடைப்பதற்கான வாய்ப்பு இடைக்கால அரசினால் ஏற்படப் போகின்றது. 2005 இல் ஜனநாயக முறைப்படி தேர்தல் நடைபெறுமெனவும் அதனடிப்படையிலேயே அரசை உருவாக்குமெனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கட்சி அரசியல், வாக்குச்சீட்டு ஜனநாயகம், பெரும்பான்மை ஜனநாயகம் என்பன ஈராக்குக்கு அறிமுகமாகவுள்ளது. இவை அனைத்தும் ஜனநாயகத்தின் பலவீனங்களாக-கீழைத்தேசத்தில் உருவாக்கியது போல் ஈராக்கில் அமெரிக்கர்கள் ஏற்படுத்துவார்கள். ஒருவகையில் இடைக்கால ஆட்சி மாற்றத்தை அவதானித்ததில் உடனடியாக வெளித்தெரிவது, காலனித்துவ பிடியிலிருந்து விடுபட்ட மக்களிடம் பிரித்தானியர் ஆட்சியை ஒப்படைத்ததற்கு ஒப்பானதாக அமையும். காலனித்துவத்தை பிரித்தானிய சாம்ராசியம் நிகழ்த்தியது போல், நவீன காலனித்துவ ஆட்சியை அமெரிக்கர்கள் ஆரம்பித்து ஈராக்குக்குச் சுதந்திரமும் கொடுத்துள்ளனர்.


சதாம்

பிரித்தானியர் 19 ஆம் நூற்றாண்டில் செய்ததை நவீனப்படுத்தி அமெரிக்கர்கள் 21 ஆம் நூற்றாண்டுகளுக்கு ஏற்ப மேற்கொண்டு வருகின்றனர். இது அமெரிக்கரின் அணுகுமுறைகளை வெளிப்படுத்தும் நிகழ்வாகவுள்ளது. உலக நாடுகளின் ஆட்சியாளர்களுக்கு சதாமின் வரலாறு விசேட பாடமாக அமையும். அதற்கான அணுகுமுறையையே அமெரிக்கா செய்து காட்டியுள்ளது.

இடைக்கால அதிகாரம் கைமாறிய மறுசந்தர்ப்பத்தில் அவ்வரசிடம் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைனும், அவரது ஆட்சியின் அங்கத்தவர்களும் ஒப்படைக்கப்பட்டதும். சதாம் ஈராக்கிய நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்ட நிகழ்வும் அரங்கேறியிருந்தது. சதாமின் நீதிமன்றக் காட்சிகள் காட்டப்பட்டதுடன் இது 21 ஆம் நூற்றாண்டின் சிறந்த நீதி விசாரணை எனவும் ஈராக்கிய இடைக்கால ஆட்சியாளரால் விபரிக்கப்பட்டது. நீதியில்லாத நீதிமன்றத்தில் சதாம் நிறுத்தப்பட்டார் என்பது விசாரணையின் பாணியையும், அதன் அணுகுமுறையையும் கொண்டு விளங்கிக் கொள்ளலாம். சதாம் அமெரிக்க இராணுவத் தளம் ஒன்றில் ஏற்படுத்தப்பட்ட விசேட நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டுள்ளார். முதல் கட்டமாக அவரது வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது. சதாமை நீதிமன்றத்தில் நிறுத்தியதுடன் சதாமின் வழக்கு விசாரணைகளை காட்சிப்படுத்தியதன் வாயிலாக அமெரிக்காவும், அதன் பொம்மை அரசும் நீதியை தாம் நிலை நிறுத்தி விட்டதாக உலகத்துக்கும், ஈராக்கிய மக்களுக்கும் காட்ட முயலுகின்றனர். அது மட்டுமல்லாது சதாம் - புஷ் தொடர்பாகவும், அமெரிக்க ஆக்கிரமிப்புத் தொடர்பாகவும் கூறியதாக வெளிவந்த கருத்துக்களில் ஏதாவது அரசியல் நோக்கம் இருக்கலாமெனக் கருத இடமுண்டு. ஏனெனில் சதாமின் வார்த்தைகள் ஒலி, ஒளி நாடாவில் வெளிவரவில்லை என்பதை கவனிக்கவேண்டும். அவ்வாறுதான் சதாம், புஷ் ஒரு கிரிமினல் என்றும், பயங்கரவாதி என்றும் கூறுவதை ஊடகங்கள் வெளிப்படுத்துவதென்பது யதார்த்தமானதாகும்.

அதாவது சதாமைவிட - வில்லியம் புஷ்ஷே உலக பயங்கரவாதியாகக் காணப்படுகின்றார். சதாமைத் தாக்கும் போது இரசாயன உயிரியல் அழிவுகளைத் தரவல்ல ஆயுதங்களை ஈராக் கொண்டிருக்கிறதென்ற போலியான, பொய்யான காரணத்தை முன்வைத்து நடத்திவிட்டு தற்போது சதாம் ஹுசைன் மீது சுமத்தும் குற்றச்சாட்டுக்கள் வேறுபாடானதாக உள்ளன.

1. 1988 ஆம் ஆண்டு குர்திஷ் மக்களை விஷவாயுவால் கொலை செய்தமை.

2. குவைத்மீது ஆக்கிரமிப்பை நிகழ்த்தியமை.

3. பல ஆயிரக்கணக்கான ஈராக்கியர்களைக் கொலைசெய்தமை.

> **"இப்படியே உலகம் மௌனமாகுமாயின் அமெரிக்க ஆதிக்கம் யாரையும் விட்டுவைக்காது. அமெரிக்காவை எதிர்க்கத் திராணியற்றவர்களும், பச்சோந்திகளும் தப்பிப் பிழைத்துவிடுவார்கள். ஆனால் சுதேச உணர்வுடன் ஆளுமை மிக்க அரசியல் தலைமைகளுக்கு அதிகமான ஆபத்து காத்திருக்கிறது உலகம் விழித்துக் கொள்ளாவிட்டால். இதனால் சதாம் ஈராக் மக்களுக்குபுரிந்த தெல்லாம் நியாயமானதென கூற முன்வரவில்லை. புஷ் சதாமைக் கேள்வி கேட்கவோ, நியாயம் பற்றி உரைக்கவோ முடியாதென்பதே வாதமாகும்."**

என்பன முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களாக உள்ளன. இவற்றுக்கும் ஈராக்மீதான தாக்குதலுக்கும் எந்தவிதமான தொடர்புமே கிடையாது. அமெரிக்க கூட்டுப்படை தாக்குதலுக்காகக் கூறிய காரணங்கள் வேறு தாக்குதலின் பின் சதாம் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் வேறானவை என்பதிலிந்தே புஷ் எப்படிப்பட்ட ஜனநாயகவாதி என்பதைப் புரிந்து கொள்ள முடியும். அமெரிக்காவின் இலக்கு சதாமே. மீண்டும் சதாம் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைத்து விட்டு மரண தண்டனையை நிறைவேற்றுவதே அமெரிக்காவின் நோக்கமாகும். அதனை அமெரிக்கா நேரடி யாக தான் செய்ததென்ற குற்றச் சாட்டு ஏற்படாது தவிர்க்கவே, ஈராக் கின் இடைக்கால அரசிடம் சதாமை விசாரணைக்காக ஒப்படைத்துள்ளது.

உலகத்தையும், ஈராக்கியரையும் ஏமாற்றுவதற்கு அமெரிக்கா போடும் நாடகமே சதாம் மீதான விசாரணையாகும். இவ் அரசியல் நாடகத்தை உலகம் பார்த்து மௌனியாக இருப்பதே கொடுமையானது. மனித உரிமைகள், கைதிகள் உரிமைகள் பற்றிய விரும்பிகள் எல்லோரும் முணுமுணுத்ததுடன் தமது பங்கு முடிந்துவிட்டதாக நினைக்கின்றனரோ என சந்தேகப்படத் தோன்றுகின்றது. இலங்கையிலிருந்தும் சட்டத்தரணிகள் பலர் சதாமுக்காக வாதாடப்போவதாகக் கூறினர். ஆனால், சதாம் நீதிமன்றத்துக்குக் கொண்டு வந்த பின்னர் அவர்கள் பேசுவதாகத் தகவல் வெளிவரவில்லை.

இப்படியே உலகம் மௌனமாகுமாயின் அமெரிக்க ஆதிக்கம் யாரையும் விட்டுவைக்காது. அமெரிக்காவை எதிர்க்கத் திராணியற்றவர்களும், பச்சோந்திகளும் தப்பிப் பிழைத்துவிடுவார்கள். ஆனால் உலகம் விழித்துக்கொள்ளாவிட்டால். சுதேச உணர்வுடன் கூடிய ஆளுமை மிக்க அரசியல் தலைமைகளுக்கு அதிகமான ஆபத்து காத்திருக்கிறது. இதனால் சதாம் ஈராக் மக்களுக்கு புரிந்ததெல்லாம் நியாயமானதென கூறமுன் வரவில்லை. புஷ் சதாமைக் கேள்வி கேட்கவோ நியாயம் பற்றி உரைக்கவோ முடியாதென்பதே வாதமாகும்.

சதாம் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்ட காட்சி சற்று கீழைத்தேசத் தலைமைகளுக்கு நெருடலாகவே அமைந்திருக்கும். ஆனால் அமெரிக்கர்கள் ஜனாதிபதியின் பதவியை பறித்ததுமட்டுமன்றி பெரும் அரசியல் தலைமையை கைதியாக்கி சிறையிலடைத்து நீதிமன்றத்துக்குக் கொண்டு வந்திருக்கின்றது. அதே நேரம் சதாமின் உடை, தோற்றத்திலிருந்து மாறுபட்டதாகத் தென்பட்டது. தோற்றமே சதாமின் கைதிக் காலத்தைப் படம் பிடித்துக் காட்டியது. ஈராக்கின் ஜனாதிபதி நானே என்ற வார்த்தைகளும் புஷ்ஷைக் கண்டித்துக் கொச்சைப்படுத்திய விடயமும் உண்மையிலேயே ஆச்சரியமானதுதான். என்றும் சதாம் ஒரு கிறுக்கனாகவே காணப்படுகின்ற நிலை சதாமிடமிருந்து வெளிவந்துள்ளது. சதாமின் ஆளுமையும் உளப்பலமும் வேறு எந்த ஆட்சியாளனுக்கும் வருவது கடினம். தேர்தலுக்கூடாகவே ஆட்சிபறிபோனால் வீழ்ந்துபோகும் உலகத் தலைமைக்கு முன்னால், சதாமின் வார்த்தைகள் உண்மையானவையானால் முன்னுதாரணமாக நோக்கப்பட வேண்டியவையே ஆகும். மிலோசுவிச்சோடு ஒப்பிடும் போது சதாம் ஈராக்கியர்களுக்காக ஆட்சி நடத்திய தலைவர். ஹிட்லரையும், முசோலினியையும் உருவாக்கிய உலகம் சதாமையும் அவ்வகையான நோக்குக்குள் கொண்டு வந்து விடும். இது அமெரிக்காவுக்கோ மேற்குலகத்துக்கோ ஒரு புதிய விடயமல்ல. இவ்வாறு உலகத்தின் பல தலைவர்களை கொடியவரர்களாக்கி அழித்தொழித்த வரலாறு அமெரிக்கர்களுக்கு உண்டு. அதன் வரிசையில் ஒருவரே சதாம் ஹுசைன். அதனால் சதாமின் வரலாற்றைக் கீழைத் தேசத்தவர்கள் நன்கு புரிந்துகொள்ள வேண்டும்.

எனவே சதாம்ஹுசைன் மரணத்தின் வாயில் நின்று கொண்டும் அநியாயத்தை எதிர்ப்பவராக விளங்குகின்ற நாகரிகமான அரசியல் மெச்சப்பட வேண்டியது. அமெரிக்காவினதும் புஷ்ஷினதும் கொடுமைகள் அம்பலப்படுத்தப்படும் நிகழ்வுகள் மதிக்கப்படவேண்டியவை. போலிகளுக்குள் ஈராக்கும் மரணத்துக்குள் சதாமும் காணப்படும் அரசியலே யதார்த்தமாகும். இத்தகைய போலிகள் முறியடிக்கப்பட வேண்டியவை மட்டுமன்றி அம்பலப்படுத்தப்பட வேண்டியதுமாகும்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



கடற்கரும்புலிகள் பாகம் - 7 ஒலிநாடாவை கேணல் சூசை வெளியிட்டுவைக்க, தேசியத் தலைவர் பெற்றுக்கொள்கிறார்.



புயல்புகுந்த பூக்கள் ஒளிநாடாவை மூத்த தளபதி ஆதவன் வெளியிட்டுவைக்க, தேசியத் தலைவர் பெற்றுக்கொள்கிறார்.



கட்ற்கரும்புலிகள் பாகம் - 8 ஒலிநாடாவை புலனாய்வுத் துறைப பொறுப்பாளர் பொட்டு அம்மான் வெளியிட்டுவைக்க, தேசியத் தலைவர் பெற்றுக்கொள்கிறார்.



இயக்குநர் சச்சிதானந்தம், இசையமைப்பாளர் கண்ணன், கவிஞர் நாவண்ணன் ஆகியோர் தேசியத் தலைவரால், தேசிய விருது வழங்கி கௌரவிக்கப்படுவதைப் படத்தில் காணலாம்.

## மழை பெய்வதற்கு பிரார்த்தனை: நிர்வாணமாக வயல் உழுத பெண்கள்

(காத்மண்டு)

நேபாளத்தின் மேற்குப் பகுதியில் பெரும்பாலானவர்கள் விவசாயத் தொழில் செய்தே பிழைக்கிறார்கள். இங்குள்ள கிராமங்களில் கடந்த சில காலமாக மழை பெய்யவில்லை. ஏராளமான விளைநிலங்கள் தரிசாகக் கிடக்கின்றன.

இதனால் கவலை அடைந்த விவசாயிகள் மழை பெய்வதற்காக நூதன பிரார்த்தனை நடத்தினார்கள்.

அங்குள்ள மாங்கி மாவட்டத்தில் பைஜாப்பூர் கிராமத்தில் ஏராளமான பெண்கள் மாட்டுபூட்டி ஏர், கலப்பையுடன் வயலை ஊழுதனர். நீண்ட காலமாக மழை பெய்யாவிட்டால் பெணகள் நிர்வாணமாக வயலை உழுவது வழக்கம். என்றாலும், கடந்த பல ஆண்டுகளாக இந்த வினோத பிரார்த்தனை நடைபெற்றது இல்லை. இப்போதுதான் இந்த வினோத பிரார்த்தனை நடந்தது.

10 இற்கு மேற்பட்ட பெண்கள் தங்கள் ஆடைகளைக் களைந்து வயல் ஓரத்தில் விசேட பூஜை நடத்திவிட்டு வயலில் இறங்கி உழுதனர். பெரும்பாலும் திருமணமான பெண்களே இதில் கலந்துகொண்டனர். சில இளம் பெண்களும் இந்த நிர்வாணப் பிரார்த்தனைக்கு வந்திருந்தனர்.

இந்த விசேட பிரார்த்தனை நடகக்கும் இடத்துக்கு ஆண்கள் யாரும் அனுமதிக்கப்படவில்லை. நிர்வாணக கோலத்தில் வயலை உழுத அம்பிகா என்ற 35 வயதுப் பெண் கூறுமபோது-

பொதுநலன் கருதியும், மழை பெய்து நிலம் செழிப்பாக வேண்டும் என்பதற்காகத்தான் இந்த நிகழ்ச்சி நடககிறது. எங்கள் குடும்பத்தினர் வறபுறுததியதால் நான் இதில் கலந்து கொண்டேன். வருண பகவானின் மனம் குளிர்ந்து மழை பெய்யும் என்பது ஐதீகம்.

பொதுவாக பெண்கள் - களை எடுப்பது, நாற்று நடுவது போன்ற வேலைகளில் ஈடுபடுவது தான் வழக்கம். வயலை உழுவதில்லை. நிர்வாணமாக வயலை உழுவது மழை பொய்த்துவிடும் நேரத்தில்தான் என்று தெரிவித்தார்.

## காஸாப் பகுதியில் அமைந்துள்ள உலோகத் தொழிற்சாலைகள் மீது இஸ்ரேல் விமானத் தாக்குதல்!



பலஸ்தீனத்தின் காஸாப் பகுதியில் அமைந்துள்ள இரண்டு உலோகத் தொழிற்சாலைகள் மீது இஸ்ரேல் விமானப் படையினர் தாக்குதல்களை நடத்தியதாக பலஸ்தீனத் தகவல்கள் தெரிவித்தன.

காஸாவின் வடபகுதியில் அமைந்துள்ள உலோகத் தொழிற்சாலைகளே தாக்குதலுக்கு இலக்கானதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது குறித்து இஸ்ரேலிய இராணுவமும் உறுதிப்படுத்தியது. இரண்டு உலோகத் தொழிற்சாலைகள் ஹமாஸ் அமைப்பினால், ஆயுதங்கள் உற்பத்திசெய்யப் பயன்படுத்தப படுவதாக இஸ்ரேல் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதல் தொடர்பான சேதவிபரங்கள் குறித்த தகவல்கள் இதுவரை தெரியவரவில்லை. இஸ்லாமிய போராளிகளால் உலோகத் தொழிற்சாலைகளில் சிறிதளவில் உற்பத்தி செய்யப்படும் வெடிபொருடகள் இஸ்ரேலுக்கு மிகவும் தொல்லைதரும் விடயமாக அமைந்துள்ளதாக பி.பி.ஸி செய்தியாளர் அலன் ஜோன்ஸன் தெரிவித்தார்.

அணமையில் உலோகத் தொழிற சாலை மீது இஸ்ரேல் இராணுவத்தினர் மேற்கொண்ட இரண்டாவது தாக்குதல் இதுவாகும்.

## ஈராக்கில் ஊடுருவும் ஆயுததாரிகளை அயல் நாடுகள் கட்டுப்படுத்தத் தவறிவிட்டன

### ஈராக்கிய வெளியுறவு அமைச்சர் குற்றச்சாட்டு

தமது எல்லைப் பகுதியூடாக ஈராக்கிற்குள் ஊடுருவும் வெளிநாட்டு ஆயுததாரிகளைத் தடுக்க ஈராக்கைச் சுற்றியுள்ள நாடுகள் தவறிவிட்டதாக ஈராக்கின் வெளியுறவு அமைச்சர் செபாரி குற்றம் சாட்டியுள்ளார்.

ஈராக்கை சுற்றிவரவுள்ள பல நாடுகள் இந்த விடயம் தொடர்பாக உறுதிமொழிகளை வழங்கிய போதும் அவற்றை அந்த நாடுகள் கடைப்பிடிக்கவில்லை எனவும், எந்த நாடுகள் இந்த ஆயுததாரிகளுக்கு உதவுகின்றார்கள் என்பதற்கும் எவ்வித ஆதாரமும் இல்லை என அவர் தெரிவித்தார்.

ஈராக்கிற்குள் ஊடுருவும் வெளிநாட்டு ஆயுததாரிகள் ஈரான், சிரியா, துருக்கி, சவுதி அரேபியா, குவைத் மற்றும் ஜோர்தான் நாடுகளிலிருந்தே வருகின்றனர்.

இவ்வாறு வரும் பெரும்பாலான ஆயுததாரிகள் அமெரிக்கப் படைகளுடன் தமது கணக்கை தீர்த்துக் கொள்ளவே வருகின்றனர். இவ்வாறு வரும் வெளிநாட்டு ஆயுததாரிகள் எவரும் சொர்க்கத்திலிருந்து ஈராக்கிற்குள் குதிக்கவில்லை. இவர்கள் வருவதற்கு ஏதோ ஒரு நாடு உதவி செய்கின்றது.

எநதவொரு அரசாங்கமும் ஆயுததாரிகளுக்கு உதவுவதாக குற்றஞ் சாட்டவில்லை. ஆனால், அவர்கள் தமது நாட்டுப் படையினருடாக சிறு, சிறு உதவிகளை இந்த ஆயுததாரிகளுக்கு வழங்கிவருகின்றன.

பல நாடுகள், குறிப்பாக குவைத் கூட பயங்கரவாதத்திற்கு எதிராக இணைந்து செயற்படவுள்ளதாகத் தெரிவித்தபோதிலும், குவைத்திலுள்ள சிலர் பயங்கரவாதிகளுடன் தொடர்புகளை வைத்துள்ளனர். இந்தப் பிரச்சினைக்கு ஈராக்கும், அதன் ஏனைய நாடுகளும் அமெரிக்காவின் உதவியின்றி தீர்வுகாண வேண்டும். நாம் இதற்கெதிராக சரியான நேரத்தில் நடவடிக்கை எடுப்போம். இது ஈராக்கின் கடமையாகும் என செபாரி தெரிவித்தார்.


வெளிநாட்டு ஆயுததாரிகளுக்கு உதவியதான அயல் நாடுகளின் ஆதாரம் தம்மிடம் உள்ளதாகவும்,



சில நாட்களில் அந்த விபரம் வெளியிடப்படுமென செபாரி தெரிவித்ததாக லண்டனிலுள்ள சண்டே ரெலிகிராப் செய்தி வெளியிட்டுள்ளது. இதேவேளை ஈராக்கிலுள்ள நிர்வாகததைக் குலைப்பதற்கு முயற்சிசெய்யும் நாடுகள் தமக்கும் இந்தநிலை வரும் என்பதனை நினைக்கவேண்டும்.

இவ்வாறு அவர்கள் தொடர்ந்து இந்த நடவடிக்கையில் ஈடுபட்டால், அதற்குள் இருந்து விடுபடமுடியாமல் போகுமென்பதனை அவர்கள் புரிந்து கொள்ளவேண்டுமென ஜோர்தான் மன்னர் அப்துல்லா தெரிவித்தார்.

## யூகோஸ்லாவியாவில் இடம்பெற்ற இனஅழிப்பு; மிலொசெவிக் தனதுபக்க வாதத்தை நேற்று நீதிமன்றில் சமர்ப்பிக்கவிருந்தார்



1990 ஆண்டு யூகோஸ்லாவியாவில் இடம்பெற்ற இன அழிப்பு மற்றும் பிற குற்றச் செயல்கள் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்ட முன்னாள் யூகோஸ்லாவிய பிரதமர் சுலோபோடன் மிலோசெவிக் தனது பக்க வாதத்தை நேற்றுச் சமர்ப்பிக்கவிருந்தார்.

இவர் தனதுபக்க வாதத்தில், பிரிட்டன் பிரதமர் ரொனி பிளேயர் மற்றும் அரச அதிகாரிகள் ஆகியோரை சாட்சியங்களுக்கு நீதிமன்றம் அழைக்குமாறு கோருவார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், தகுந்த ஆதாரத்தை இவர் தெரிவிக்காமல் எவரையும் நீதிமன்றத்துக்கு அழைக்க முடியாதென நீதிமன்றம் இவருக்குக் கூறியுள்ளது.

மிலோசெவிக் தனக்கெதிராக மற்றயவர்கள் சமர்ப்பித்த ஆதாரங்களைக கேட்பதற்கு கடந்த இரண்டு வருடங்கள் செலவிட வேண்டியிருந்தது. தற்போதைய விசாரணைகளில் மூன்று பேரடங்கிய நீதிபதிகளில் ஜமேக்காவைச் சேர்ந்த பற்றிக் றொபின்சன் தலைமை நீதிபதியாகவுள்ளார்.

மிலோசெவிக், சாட்சிகளாக 1600 பேரை அழைத்துள்ளார். இது அரச தரப்பு கடந்த இரண்டு வருடங்களாக நடத்தி முடித்த விசாரணைகளில் நிறுத்தப்பட்ட சாட்சிகளில் ஐந்து மடங்கு உயர்வானதாகும்.

அத்துடன் அமெரிக்க முன்னாள் இராஜாங்கச் செயலர் மடலைன் அல்பிறைட், பிரிட்டனின் முன்னாள் வெளியுறவுச் செயலர் றொபின் குக் ஆகியோரும் இந்த விசாரணைகளில் சமூகமளிக்க வேண்டுமென மிலோசெவிக்கின் சட்டவாளர்கள் தெரிவித்தனர்.

மிலோசெவிக் தனது வாதங்களை முன்வைப்பதற்கு அவருக்கு 150 நாட்கள் அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.

சிறுபான்மை இனத்தவரான சேர்பியரைப் பாதுகாக்கும் முகமாகவே 1999 ஆம் ஆண்டு கொசோவாவில் அல்பானிய இனத்தவர் மீது தான் தாக்குதலை நடத்தியதாக மிலோசெவிக் தெரிவிக்க இருப்பதாகவும் எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன் குரோஷிய மற்றும் பொஸ்னியப் பகுதிகளில் இருந்த சேர்பியத் துருப்பினர் தனது கட்டுப்பாட்டின் கீழ் இருக்கவில்லையெனவும் மிலோசெவிக் தெரிவிக்க இருந்தார். தனது வாதங்களுக்காக மிலோசெவிக்கே ஆஜராக உள்ளார். ஆனாலும் இவர் உயர் இரத்த அழுத்தம் மற்றும் இதயநோய் காரணமாக அவதிப்பட்டு வருகிறார்.

இவரது இந்த நோய்கள் காரணமாக இவரது வாதத்தின்போது இவருக்கு இடையிடையே ஓய்வு கொடுக்கவேண்டுமெனவும், இவர் பக்க விசாரணை உடனடியாக முடிவுக்கு வருவதற்கான அறிகுறி தெரியவில்லையெனவும் பி.பி.ஸி. செய்தியாளர் தெரிவித்தார்.

நிறைஞ்சனாஸ் சங்கானை
விஜய், திரிஷா, பிரகாஷ்ராஜ் நடித்த கில்லி



காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.(பு.நே.)
வெள்ளி,சனி, ஞாயிறு இரவு 8.45(பு.நே)
EHTREMITIEH (சி-2723)

நாகம்ஸ் சுன்னாகம்
மாற்றியமைக்கப்பட்ட டொல்பி ஒலி அமைப்புடன
இன்று முதல்
மாதவன், அமோகா, பூஜா, தாமு நடித்த ஜே ஜே



(சி-2723)
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்.
சூரியா, ஜோதிகா, விவேக் மற்றும் பலர் நடித்த பேரழகன்



(சி-2623)
காட்சிநேரம்:-10.30,2.30,6.30 (பு.நே)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# எரிக் சொல்ஹெய்ம் இன்று பாலசிங்கத்தை சந்திப்பார்!

சமாதானப் பேச்சை மீள ஆரம்பிப்பது தொடர்பாக, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் நிலைப்பாட்டை, விடுதலைப் புலிகளுக்குத் தெரியப்படுத்தும் நோக்கில் - நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தை இன்று லண்டனில் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார்.

இந்தச் சந்திப்பு லண்டனிலுள்ள கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

கடந்த வாரம் இலங்கை வந்திருந்த எரிக் சொல்ஹெய்ம், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் கலந்துரையாடிய பின்னர், மறுநாள் ஜனாதிபதி சந்திரிகாவை சந்தித்துப் பேசியிருந்தார்.

இந்தக் கலந்துரையாடலின்போது தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு குறித்து சொல்ஹெய்ம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு கூறியிருந்தார். இதன் போது ஜனாதிபதி சந்திரிகாவின் தற்போதைய நிலைப்பாடுகள் குறித்து கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துக்கு சொல்ஹெய்ம் எடுத்துக் கூறுவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

தனது இலங்கை விஜயம் குறித்து நோர்வே அரசுக்கு தெரியப்படுத்திய பின்னரே சொல்ஹெய்ம் லண்டனுக்குச் சென்று கலாநிதி பாலசிங்கத்தைச் சந்திக்கவிருப்பது குறிப்பிடத்தக்கது.

### நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர

## சிரேஷ்ட இராணுவ அதிகாரி மட்டக்களப்புக்கு அனுப்பப்பட்டார்

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்றுக்காலை விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த போராளிகள் மீது இருவேறு தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றன.

கிழக்கின் தற்போதைய நிலைமைகளை ஆராய்ந்து, நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவரை, இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சாந்த கொட்டேகொட நியமித்துள்ளார்.

இராணுவ தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் சூல செனவிரத்னவை உடனடியாக மட்டக்களப்புக்குச் சென்று பாதுகாப்பை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் இராணுவத் தளபதி பணிப்புரை விடுத்திருக்கின்றார்.

கிழக்கில் நடைபெறும் இத்தகைய மோதல்களில் இராணுவத்தினர் சம்பந்தப்பட்டிருப்பதாக வெளியான செய்திகளில் எந்த உண்மையுமில்லையென்றும் இராணுவப் பேச்சாளர் கேணல் சுமேத பெரேரா தெரிவித்தார்.

## மட்டக்களப்பு சம்பவங்கள்; ஜனாதிபதி செயலகம் கவலை

மட்டக்களப்பில் நேற்றுக்காலை விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் மீது நடத்தப்பட்ட இரண்டு வெவ்வேறு தாக்குதல் சம்பவங்கள் குறித்து அரசாங்கம் கவலை அடைந்திருப்பதாக - ஜனாதிபதி செயலகம் நேற்றுமாலை விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

இத்தகைய தாக்குதல் சம்பவங்கள் கிழக்கில் ஒழுங்கு நிலைமைகளைச் சீர்குலைத்துவிடும். நேற்றுக்காலை நடந்த சம்பவங்களில் ஒருவர் உயிரிழந்ததுடன் பலர் காயமடைந்தனர்.

இந்தக் குற்றச்செயல்களை கட்டவிழ்த்து விட்டோரை இனங்காண்பதற்காக பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்திருப்பதாகவும் ஜனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## 18 இலங்கை மீனவர்கள் இந்திய அரசால் விடுவிப்பு

இந்தியக் கடற் பிராந்தியத்துக்குள் சட்டவிரோதமாக பிரவேசித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்ட 18 இலங்கை மீனவர்கள் தமிழகப் பொலிஸாரால் விடுவிக்கப்பட்டனர்.

கடற்தொழில் நீர்வள பிரதி அமைச்சர் நிகால் கலப்பதி விடுத்த வேண்டுகோளை அடுத்தே இந்திய அரசு இந்த மீனவர்களை விடுவித்தது.

### பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

## குடும்பத்துடன் வெளிநாட்டுக்கு புலம்பெயர்கிறார் மகேஸ்வரன்

பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதால் வெளிநாடு ஒன்றுக்கு செல்லவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இந்து கலாசார அமைச்சருமான தி.மகேஸ்வரன் தெரிவித்தார்.

இனந்தெரியாத இளைஞர் ஒருவர் தம்மைப் பற்றிய தகவல்களை பெற்று வருதுடன் தம்மைப் பின்தொடர்ந்து வருவதால் தமக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து அரசிடம் தமக்கு பாதுகாப்பு வழங்குமாறு கோரிய போதும் இது குறித்து எந்த தகவலும் அரசு தமக்கு வழங்கவில்லை எனவும் தெரிவித்தார்.

தமக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகவும், இதனால் தாம் வெளிநாடு ஒன்றுக்கு பாதுகாப்புக்காக செல்லவிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## துணைப்படை ஆட்சேர்ப்பு கால எல்லை நீடிப்பு!

தமிழீழ தேசிய துணைப்படைக்கு ஆட்களைச் சேர்ப்பதற்கான கால எல்லை இன்றிலிருந்து எதிர்வரும் 20 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளதாக தமிழீழ காவல்துறையினர் அறிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை போன்ற தூர இடங்களிலிருந்து நேர்முகத் தேர்விற்கு வருபவர்களின் நன்மை கருதியும் முன்னர் வழங்கப்பட்ட கால எல்லையை நீடிக்குமாறு பலர் விடுத்த கோரிக்கையை அடுத்துமே கால அவகாசம் நீடிக்கப்பட்டிருப்பதாக தமிழீழ காவல்துறையினர் தெரிவித்தனர்.

## புலிகள் மீது இருவேறு...

கொண்டிருந்த இவர்கள் மீது மறைந்திருந்து நடத்தப்பட்ட தாக்குதலில் இருவரும் படுகாயமடைந்தனர்.

இவர்கள் உடனடியாக மட்டக்களப்பு வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

நகர அரசியற்துறை பொறுப்பாளர் சேனாதிராஜாவுக்கு நுரையீரல் பகுதியில் காயம் ஏற்பட்டுள்ளதால் ஆபத்தான நிலையில் இருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை - நேற்றுக்காலை 9.40 மணியளவில் மட்டக்களப்பு நகருக்கு வடமேற்காக 20 கிலோமீற்றர் தொலைவில் உள்ள வந்தாறுமூலையில் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த புலிகள் இயக்கப் போராளிகள் இருவர் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

படையினரின் பிரதான விநியோகப் பாதை உயர்பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்கும் வாழைச்சேனை வீதியில் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இவர்கள் மீது இன்னொரு மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தினர்.

இந்தச்சம்பவத்தில் முறிஞ்சன் என்ற போராளி உயிரிழந்ததுடன், ஈஸ்வரன் என்ற போராளி படுகாயமடைந்தார்.

காயமடைந்த போராளி துப்பாக்கிச் சூடு நடத்திய இருவரின் பெயர் விபரங்களைப் பொலிஸாரிடம் கூறியுள்ளதாகவும் சந்தேக நபர்களைத் தேடும்பணி மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தை அடுத்து மட்டக்களப்புப் பகுதியில் பதற்றமான சூழலொன்று உருவாகி வருவதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

## மட்டக்களப்பு...

டார் சைக்கிளில் வந்த இருவர் இவர்கள் மீது கைத்துப்பாக்கியால் சுட்டனர்.

தற்பொழுது போராளி றொசான் சிகிச்சை பெற்று வருகிறார். நேற்று இடம்பெற்ற இந்த இரு சம்பவங்களும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இடம்பெற்றன. ஏற்கனவே இவ்விதமான படுகொலைகள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இடம்பெற்றுள்ளன.

நாங்கள் பல சந்தர்ப்பங்களில் படையினருடன் தொலைபேசி மூலமும், பேச்சுவார்த்தைகளின் போதும் படுகொலைகள், மிரட்டல்கள் நடைபெறாமல் தடுப்பது படைகளின் கைகளிலேயே தங்கியுள்ளது என வலியுறுத்தியுள்ளோம்.ஆனால் இந்த அறிவித்தலை படையினர் கரிசனையில் எடுத்துக்கொள்ளவில்லை என எமக்குத் தோன்றுகிறது.

படையினர் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை வலுவிழக்கச் செய்யும் நடவடிக்கையாக இவற்றை மேற்கொண்டு மீண்டும் ஒரு யுத்தத்தை முன்னெடுக்க வழிவகை செய்த வண்ணம் இருக்கின்றனர் என்பது இச்சம்பவங்களால் புலனாகின்றது.

இந்தச் சம்பவங்களை பாரிய யுத்தநிறுத்த மீறல்கள் என விடுதலைப் புலிகள் கருதுவதோடு இதனை வன்மையாகக் கண்டிக்கின்றனர். நாங்கள் மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு சமாதான ஒப்பந்தத்தை மதித்து பேணிக்காப்போம் என்று மீண்டும் ஒருமுறை வலியுறுத்துகின்றோம்.

எம்மீது மீண்டும் ஒரு யுத்தம் திணிக்கப்பட்டால், நாம் அதனை எதிர்கொள்ளத் தயாரென்று ஆணித்தரமாகக் கூறுகின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கரும்புலிகள் நாளை...

நேற்றுமாலை 7 மணிக்கு திருமலை மாவட்ட மகளிர் அமைப்பு இணைப்பாளர் கண்மணி வடிவேலு தலைமையில் இடம்பெற்ற நிகழ்வுகளில் கரும்புலி மாவீரர்களது பெற்றோர்கள் விடுதலைப் புலிகளின் தளபதிகளில் ஒருவரான குஞ்சன் தலைமையில் கௌரவிக்கப்பட்டனர்.

தீவுப்பகுதியில் கரும்புலிகள் நினைவுதின நிகழ்வு புங்குடுதீவு பெருங்காடு சிவன் கோயில் முன்றலில் நடைபெற்றது.

முன்னதாக நேற்றுமாலை 6.15 மணியளவில் புங்குடுதீவு - நயினாதீவு ப.நோ.கூ.சங்க தலைமைப் பணிமனையின் முன்னாலிருந்து தீவகப் பாடசாலை மாணவர்களின் பான்ட வாத்திய அணிவகுப்புடன் 261 கரும்புலி மாவீரர்களின் உருவப்படம் தாங்கியு ஊர்தி நிகழ்வு நடைபெறும் இடத்துக்குச் சென்றதை அடுத்து அரங்க நிகழ்வுகள் இடம்பெற்றன.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்திலும் கரும்புலிகள்தின நிகழ்வுகள் இடம்பெற்றன. புதுக்குடியிருப்பு நகரிலுள்ள கரும்புலிகள் நினைவாலய முன்றலில் வர்த்தக சங்கத் தலைவர் கந்தசாமி தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கரும்புலிகளின் திருவுருவப் படத்திற்கு விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன் ஈகச்சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்தார். பின் சிறப்புரையினையும் அவர் நிகழ்த்தினார்.

வவுனியா மாவட்டத்தில் கரும்புலிகள் நாள் நிகழ்வுகள் பண்டாரிக்குளம் பைற்றர் விளையாட்டரங்கில் நடைபெற்றது முன்னதாக நேற்றுமாலை 5.30 மணியளவில் பண்டாரிக் குளம் சந்தியிலிருந்து பாடசாலை மாணவர்களின் பான்ட் வாத்திய அணிவகுப்புடன் கரும்புலிகளின் திருவுருவப் படங்களைத் தாங்கிய ஊர்திப்பவனி நிகழ்வு நடைபெறும் இடத்தைச் சென்றடைந்தது.

இதன்பின் வவுனியா மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் அலை தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

தேசியக் கொடியினை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஞானவேல் ஏற்றினார். பொதுச்சுடரினை கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான விநாயகம் ஏற்றினார். இதன்பின் ஈகச்சுடர் ஏற்றல், மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கான மலர்மாலை அணிவித்தல் ஆகியன இடம்பெற்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கரும்புலிகள் நாள் நிகழ்வுகள் பளுகாமம் பொது விளையாட்டு மைதானத்தில் நேற்றுமாலை 4.30 மணியளவில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், கிழக்கு மாகாண தளபதி கேணல் ரமேஷ் தளபதிகளான ரமணன், மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், கிழக்கு மாகாண கடற்புலிகளின் தளபதி ஸ்ரீராம், மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் குவேனி ஆகியோர் கலந்துகொண்டதுடன் பெருமளவான மக்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

அம்பாறை மாவட்டத்தில் கரும்புலிகள் நிகழ்வு அக்கரைப்பற்று ஆலையடி வேம்பு கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. கரும்புலி ஒருவரின் தாயார் பொதுச்சுடரினை ஏற்றினார். தேசியக்கொடியை மாவட்ட நிர்வாகப் பொறுப்பாளர் முரளி ஏற்றினார்.

மன்னார் மாவட்டத்தின் கரும்புலிகள் தின பிரதான நிகழ்வுகள் அரிப்புத் துறையில் இடம்பெற்றன.

மன்னார் மாவட்ட கடற்புலிகளின் பொறுப்பாளர் நிலவன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வுகளின் முதற்கட்டமாக மாலை 5.30 மணிக்கு மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 12 கரும்புலிகளினது பெற்றோர்களும் பான்ட் வாத்தியம் இசைக்க அரிப்புத்துறை றோ.க பாடசாலை மைதானத்திற்கு அழைத்துவரப்பட்டனர்.

இந்நிகழ்வில் பொதுச்சுடரினை தமிழீழ துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றி வைத்தார்.

அகவணககத்தை தொடர்ந்து சிறப்புரைகளை கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான அர்ச்சுனன் கல்விக்குழுவைச் சேர்ந்த நற்புகழ் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இனியவன் மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் இளவரசி மாவீரர் பணிமனைப் பொறுப்பாளா பிறேம் யாழவன், காப்பகப் பொறுப்பாளர் சாந்தன் உட்படப் பலர் நினைவுரைகளை நிகழ்த்தினர்.

இதேசமயம் மன்னாரில் ஆண்டான்குளம் பகுதியிலும் கரும்புலிகள் தின பிரதான நிகழ்வுகள் இடம்பெற்றன. இந்நிகழ்வில் பெருமளவான மக்கள் கலந்து கொண்டனர்.

(03,201,07,04,10,தீ,லெ)

## தமிழர்கள் மீது...

இன்று யுத்தமா, சமாதானமா என்ற சூழலுக்கு நாம் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.

இன்றும்கூட எமது போராளிகள் தாக்கப்பட்டுள்ளனர், எமது போராளிகளின் உயிர்கள் பறிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

ஆனால் எமது தேசியத் தலைவர் இன்னும் எல்லை கடந்த பொறுமையுடன் இருப்பது சமாதானத்தின்பால் அவர் காட்டும் பெரும் அக்கறைக்கு எடுத்துக் காட்டாகும்.

நாம் யுத்தத்தை விரும்புபவர்களல்ல, நாம் யுத்தத்தில் நின்றவர்கள், யுத்தத்தை அனுபவித்தவர்கள், யுத்த மையப்பகுதியில் நின்றதன் காரணமாக கை, கால்களை இழந்ததோடு, அதற்கும் மேலாக தாயக விடுதலைப் போரில் பதினேழாயிரத்து 648 மாவீரர்களைக்கூட விலைகொடுத்து நிற்கின்றோம்.

கரும்புலிகளின் சாதனை விடுதலைப் போராட்டத்தில் புதிய பரிமாணத்தைத் தந்தது.

பொருத்தமான, இறுக்கமான காலகட்டத்தில் கரும்புலிகளே தடைகளை உடைத்து விடுதலைப் போராட்டத்தை அடுத்த கட்டத்திற்கு நகர்த்திச் சென்றனர். இதுவே கரும்புலிகளின் உன்னதமான சாதனையாகும்.

உலக விடுதலைப் போராட்டங்களை நாம் நோக்கினால், துரோகச் செயல்களும் இருந்தே வந்துள்ளது.

எமது விடுதலைப் போராட்டத்தில் இவ்வாறு எதிர்நோக்கிய பல துரோகச் செயல்களை மிகத் துல்லியமாகவும், மிக நேர்த்தியாகவும் முறியடித்து வெற்றிகண்டுள்ளார் நம் தலைவர்.

அண்மையில் நமது மாவட்டங்களில் இத்தகைய கனத்தமான சூழ் நிலை ஏற்பட்டபோதும், அதனை முறியடித்து தமிழனின் பலத்தை, தமிழ் தேசிய படையின் பலத்தை மீண்டும் ஒரு முறை உலகிற்கும், சிங்கள தேசத்திற்கும், எம்மை எள்ளி ஏளனமாக நினைக்கும் எதிரிக்கும் நிரூபித்துள்ளார்.

எனவே எமது படையைச் சிதைக்க நினைக்கும், சிதைக்க முற்படும் எதிரி நாங்கள் இன்று ஓர் படைக்கட்டுமானத்தைக் கொண்டிருக்கிறோம் என்பதை உணரவேண்டும்.

தேச விடுதலையோடு நாம் ஒன்றித்து நிற்போமானால் எந்தப்படை வந்தாலும் எமது காலடியில் அது தூசாக மாறும்.

தமிழர்கள் எல்லாம் போராளிகளாகவும், போராளிகளெல்லாம் கரும்புலிகளாகவும் மாறும் காலம் வெகு தூரத்தில் இல்லை.

கரும் புலிகளின் தியாகத்தை எம் மனங்களில் ஏந்தி, கரும்புலிகள் விட்டுச்சென்ற பாதையூடாக எமது தேச விடுதலையை வென்றெடுக்க அனைவரும் ஓரணி திரளவேண்டும்" எனவும் அவர் கூறினார். (07)

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 06.07.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.